Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-srsskr @ evreka.lk
(சி.1136)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 14 (12.09.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 343

# அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களை குழப்புவதற்கு எதிர்க்கட்சிகள் தீவிர முயற்சி

## ஜே.வி.பியுடன் சுதந்திரக்கட்சி கூட்டமைக்க மக்கள் அழுத்தம் கொடுக்கவேண்டும்!

### என்கிறார் திலக் கருணாரத்ன

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டமைப்பை ஏற்படுத்த மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு, பொதுமக்கள் அழுத்தம் கொடுப்பது அவசியம் என்றும் சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையில் - தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோல்வியடையச் செய்வதற்கு இவ்வாறான கூட்டமைப்பை அமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டிலே சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

## குற்றம் சாட்டுகிறார் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

**அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமரச பேச்சுக்களின் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த சமாதான நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு எதிர்க்கட்சிகள் முயல்வதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் 13 புதிய முகாம்களை அமைத்துள்ளதாக - எதிர்க் கட்சிகளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இவை முற்றிலும் தவறானவை. விடுதலைப் புலிகள் திருகோணமலையில் குரங்குப்பாஞ்சான் என்ற இடத்தில் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். அதனைத் தவிர வேறு எந்த முகாமையும் புதிதாக அமைக்கவில்லை என தெரிவித்த பீரிஸ், விடுதலைப் புலிகளின் இந்த முகாமால் திருகோணமலை துறைமுகத்திற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருவதையும் நிராகரித்துள்ளார்.

குரங்குப்பாஞ்சான் முகாம் போர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் புலிகளுடன் அதிரடிப்படையினர் சந்திப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை அம்பாறை அக்கரைப்பற்றில் அமைந்துள்ள இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பணிமனையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பளர் பாவா, காப்பகப் பொறுப்பாளர் ஜனார்த்தனன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஹென்றி மற்றும் தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் தரப்பில், அம்பாறை மாவட்ட சிறப்பு அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி உபுல் செனவிரத்ன தலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பத்திரிகையாளர் எழுதிய பிரபாகரன் குறித்த வரலாறு புத்தகமாக வெளிவருகிறது

(கொழும்பு)

இலங்கைப் புலிகள் என்ற புத்தகத்தின் ஆசிரியரான எம்.ஆர்.நாராயணசுவாமி தலைவர் பிரபாகரனின் வரலாற்றுக் குறிப்புக்களை கொண்டு 'ஏமாற்றும் எண்ணங்கள் கொண்ட மனத்தின் அடித்தளம்' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

கொழும்பு விஜித யாப்பா புத்தக நிறுவனத்தின் ஆதரவுடன் அடுத்த மாதம் 15 ஆம் திகதி இந்தப் புத்தகம் வெளிவருகிறது.

இந்தப் புத்தகம் மூன்று பகுதிகளை உள்ளடக்கியதாக வெளிவருகிறது. இதில் முதல் பகுதியில் சிங்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அபிவிருத்தித் திட்டங்களை அவுஸ்திரேலிய அதிகாரிகள் பார்வை

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் யாழ்.வந்த அவுஸ்திரேலியன் எய்ட் அதிகாரிகள் இருவர் யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி திட்டம் பற்றி யாழ்.செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, குடாநாட்டில் மழை நீரை சேகரித்து சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுபாட்டை நீக்குதல், சுயதொழிலில் ஈடுபட விரும்புபவர்களுக்கு அவர்களுக்கான பயிற்சி நெறியை மேற்கொள்ளுதல், ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் அபிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



பேசுவதற்கு முன்வருகினம். ஆனால், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பின்நிற்கினம்.

## வலி.வடக்கு மக்களின் அடிப்படை பிரச்சினை தொடர்பாக முக்கியமான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில், அவர்களுக்கான அடிப் படைப் பிரச்சினைகள் எதுவும் இதுவரை தீர்க்கப்படாத நிலையிலேயே இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

வலி. வடக்கு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் பத்து மணிக்கு தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே, ஒன்றிய உறுப்பினர்கள் அனைவரையும் இந்தக் கலந்துரையாடலுக்கு தவறாது சமூகம் தருமாறு ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

## இந்திய வெளியுறவு அமைச்சர் விரைவில் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சின்ஹா அடுத்த மாத நடுப்பகுதியில் இலங்கை வரவுள்ளதாக பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சின்ஹா கடந்தமாதம் நடைபெற்ற தெற்காசிய ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை வரவிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டர்ஸுக்கு எதிராக அமைச்சரவையில் கொண்டுவர விருந்த நம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் விக்கிரமசிங்கவை அகாஷி சந்தித்து பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு வந்துள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி நேற்றுமுன்தினம் இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் ரோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தென்பகுதி ஊடகவியலாளர் யாழ்.விஜயம்

தென்பகுதியின் ஊடகத்துறையைச் சேர்ந்த 40 பத்திரிகையாளர்கள் - நவம்பர் மாத முதல்வாரத்தில் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இவர்களுக்களுக்கான பயண ஒழுங்கினை அரசாங்க தகவல் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளதென தகவல் தொடர்புதுறை அமைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் கைதான போராளியிடம் பொலிஸார் மன்னிப்பு கோரினர்

(யாழ்ப்பாணம்)

முகமாலை சோதனைச் சாவடியில் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட போராளி ஜெகனிடம், பொலிஸார் மனித உரிமை ஆணைக்குழு அலுவலர் முன்னிலையில் மன்னிப்புக் கோரினர்.

கடந்தவாரம் முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் விடுதலைப் புலி உறுப்பினரான ஜெகன் கைதுசெய்யப்பட்டு விலங்கிடப்பட்ட சம்பவம் குறித்த விசாரணை நேற்று யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்விசாரணையின்போது சுன்னாகம், கொடிகாமம் சிறிலங்கா காவல்துறைப் பொறுப்பதிகாரிகள் தமது தவறுகளை ஒப்புக்கொண்டதுடன், விடுதலைப் புலிகள் இயக்க போராளியான ஜெகனிடம் மன்னிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

**நேற்றுப் பிரசுரமான வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூகசேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2003 விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 01. 4 | 12. 17 | 23. BDE | 31. 4 |
| 02. 3 | 13. 2 | 24. E | 32. 25 |
| 03. 3 | 14. 2 | 25. AB,CD | 33. 270 Kg |
| 04. 1 | 15. 2 | 26. 38.5 $CM^2$ | 34. 198 Km |
| 05. 3 | 16. 1 | 27. 12.25 $CM^2$ | 35. 30% |
| 06. D | 17. E | 28. 14 $CM^2$ | 36. 8.15 மணி |
| 07. 2 | 18. 3 | 29. 18 | 37. 3:2 |
| 08. C | 19. 2 | 30. 4 | 38. 3 |
| 09. B | 20. 1 | | |
| 10. E | 21. C | | |
| 11. 46 | 22. B | | |


நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், பிரியங்கா சோப்ரா நடித்த

தமிழன்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

WISH MASTER

(கராட்டிப் படம்)

(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்றுமுதல்

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா நடித்த

ராமன் தேடிய சீதை

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

(சி-1424)


## வடமராட்சி, தென்மராட்சி

# வலய ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கு - 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெற விருந்த சமூகக்கல்வியும் வரலாறும் பாட செயலமர்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய பாடத்திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட, சமூகக்கல்வியும் வரலாறும் பாடம் தொடர்பான அறிமுக செயலமர்வு, இன்றும் நாளையும் நடைபெறவிருந்தது.

இந்தச் செயலமர்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக, தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது.

இந்தச் செயலமர்வு நடைபெறவுள்ள திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை விடுதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவில், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் தங்கி நிற்பதற்காக - யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய விடுதி புனரமைக்கப்பட்டுள்ளது.

இதற்காக, ஐம்பதாயிரம் ரூபா, யாழ். செயலகத்தினூடாக வழங்கப்பட்டுமை குறிப்பிடத்தக்கது.

## ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வருடாந்த பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)


யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், 175 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழாவும், நாளை காலை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் -

தலைமை விருநதினராக - யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரனும், தலைவராக அதிபர் எஸ்.சோமேஸ்வரபிள்ளையும் கலந்து கொள்வர்.

தொடர்ந்து - நூல் வெளியீட்டுரையினை, யாழ்.மத்தியகல்லூரி ஆசிரியர் ஞானதிருக்கேதீஸ்வரனும், மதிப்பீட்டுரையினை யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி விசாகரூபனும் வழங்குவர்.

நூலின் முதற்பிரதியை யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் பெற்றுக்கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சமுத்திரா ரேட்ஸ் லிமிட்டட் வழங்கும் விசேட சலுகை

விவசாயப் பெருமக்களே!

சைவ உணவக உரிமையாளர்களே!

ஆயுர்வேத வைத்திய சிகாமணிகளே!

உங்களுக்குத் தேவையான கடனை எந்த வங்கியிலும் 10 நாட்களுக்குள் ஏற்பாடு செய்து தரப்படும். நேரடியாக விஜயம் செய்யுங்கள்.

சமுத்திரா ரேட்ஸ் லிமிட்டட்

117 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

☎: 021 - 222 2938.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்

212, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021-2225542

(சி-1484)

கோலாகலத் திறப்பு விழா



இலங்கையின் அதிசிறந்த வங்கியென

பல விருதுகளைப் பெற்ற கொமர்ஷல் வங்கியின்

112வது கிளை, சுன்னாகத்தில்

இல.87, காங்கேசன்துறை வீதியிலுள்ள

ராஜா கட்டடத்தில்

அதன் தலைவர் திரு.மகேந்திர அமரசூரிய அவர்களால்

இன்று 12.09.2003 வெள்ளிக்கிழமை

சுபவேளையான காலை 9.13 மணிக்கு

வைபவரீதியாக திறந்துவைக்கப்படும் என்பதை

மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்!



உயர் தொழில்நுட்பத்துடன் கூடியதும், நாடு பூராகவும் பரந்த கணினி மயமாக்கப்பட்ட வலையமைப்பைக் கொண்டதும், தனித்துவமானதும், திறமைமிக்கதுமான வங்கிச் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவரும் எமது வங்கியின், சுன்னாகக் கிளையின் திறப்பு விழாவில் கலந்து கொள்ளும்படி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

கொமர்ஷல் வங்கி

"உங்கள் நலமே எங்கள் நோக்கம்"

(சி-1478)

## பொ.ஐ.மு. உறுப்பினர்களை

# சிறைச்சாலைகளில் அடைப்பது தொடர்பாக ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்கு கடிதம்!



(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைதுசெய்து, சிறையில் அடைப்பது தொடர்பாகப் பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு மேற்கொண்டு வருகின்ற கைதுகள் தொடர்பாக, அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு, குற்றம் எதுவும் செய்யாதநிலையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் கண்டி மாவட்ட அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அலுக்கமகே கைதுசெய்யப்பட்டுள்ளமையும், பொ.ஐ.முவின் ஜனகபண்டார தென்னக்கோன் கைது செய்யப்பட்டமை தொடர்பாகவும், அவர் தனது கடிதத்தில் பொலிஸ் மா அதிபருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களைத் தாக்கியதாகக் குறிப்பிட்டே, மேற்படி இருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

அரசியல் வன்முறைகளை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்துச் செல்வதாகவும், அவ்வாறான நடவடிக்கைகள் நாட்டின் எதிர்கால அரசியலைப் பாதிக்கும் செயலாக அமையும் என பொலிஸ் மா அதிபருக்குக் எழுதிய கடிதத்தில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைதுகளை நிறுத்துவதற்கு - நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமெனவும், பொலிஸ் மா அதிபரை ஜனாதிபதி அந்தக் கடிததத்தில் கேட்டுள்ளார்.

# போர்நிறுத்த உடன்படிக்கையை கிழித்து எறிய முடியாது!

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

போர்நிறுத்த உடன்படிக்கையைக் கிழித்து ஏறியுமாறு - ஒரு சிலர் கூறுகிறார்கள். ஆனால், அவ்வாறு செய்யமுடியாது என அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து, நோர்வே தூதுவர்களைத் திருப்பி அனுப்புமாறு கோருவோரின் கோரிக்கைகளை நிறைவேற்றினால், நாடு யுத்தத்துக்குத் தள்ளப்படுவதைத் தவிர்க்கமுடியாது போகும் எனவும் அவர் தெரிவித்தார். ஹிக்கடுவப் பிரதேசத்தில் பெண்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கும் வைபவத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் மூலிகை தோட்டம் அமைக்க கோரிக்கை!

நாட்டிலுள்ள சகல பிரதேசசபைகளிலும் - மூலிகை மருந்து தோட்டங்களினை ஆரம்பிக்குமாறு, இலங்கையின் ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிறுவனம் கேட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக - கம்பஹா மாவட்டத்திலுள்ள அத்தனகலைப் பிரதேசசபையின் - உரப்பொல என்ற இடத்தில், அண்மையில் இந்த மூலிகைத் தோட்டம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

# கைத்தொழில் கிராமம் சிகிரியாவில் அமைப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதலாவது கைத்தொழில் கிராமம் ஒன்று, தம்புள்ளையிலுள்ள சிகிரியாவில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் தொழிற்சாலைக் கிராமம் - ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில், 18 தொழிற்சாலைகளை உள்ளடக்கியது. இங்கு நூறு வரையிலான உற்பத்தியாளர்கள் தமது முயற்சிகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கொடிய வதைகளைச் செய்யும் பொலிஸார் பதவி விலக வேண்டும் எனக் கோரிக்கை!

## மனித உரிமை ஆணைக்குழு விடுத்தது

கொடிய வதைகளை மேற்கொளளும் பொலிஸ்காரர்களைப் பதவி விலகுமாறு கோரி, மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளது.

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் குற்றவாளிகளுக்கு எதிராக, கொடிய வதைகளை மேற்கொள்கின்ற பொலிஸாரின் பதவிகளைப் பறிக்கவேண்டும் என்றும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிய வதைகள் காரணமாக, சிறைச்சாலைக்குள்ளே கைதிகள் மரணமாகின்ற நிகழ்வுகள் - மனித உரிமை மீறல் நடவடிக்கையாகும் என்று குறிப்பிட்டே, மனித உரிமை ஆணைக்குழு இந்த அறிக்கையை விடுத்துள்ளது.

1994 ஆம் ஆண்டு - 22 ஆம் அரசியல் அரசமைப்புச் சட்டத்தில் குறிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக, நடந்து கொள்ளும் நடைமுறைகள் தொடர்பான விளக்கத்தில், பொலிஸாருக்கு எதிராக இவ்வாறான வழக்குகளை செய்யலாம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடைமுறைக்கு ஏற்ப, பொலிஸாரைப் பதவியிலிருந்து விலகுமாறு கூறி - மனித உரிமை ஆணைக்குழு அறிக்கை விடுத்துள்ளது.

## ஆயிரம் விண்ணப்ப பத்திரங்கள் விநியோகம்!

(கொழும்பு)

மாகாண சபை தேர்தல் சம்பந்தமாக, இதுவரை 1000 விண்ணப்பப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஐ.தே.கட்சியின் ஆலோசனைக் குழு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை அரசியலில் ஜேர்மன் தலையிடாது

## தூதுவர் ஜீர்ஜன் எலியஸ்

ஜேர்மனி ஒரு போதும் இலங்கை அரசியலில் தலையிடமாட்டாது. ஆனால், புனர்வாழ்வு, புனரமைப்பிற்கு வேண்டிய உதவிகளை வழங்கும் என, ஜேர்மன் தூதுவர் ஜீர்ஜன் எலியஸ் தெரிவித்தார்.

அண்மையில் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த தூதுவர் அங்கு அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

நாம் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்குப் பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றோம்.

குறிப்பாக யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பெரிய திட்டங்களை ஆரம்பித்து முன்னெடுத்து வருகின்றோம். ஜி.ரி.இசற் நிறுவனம் மூலமாக கல்விப் பணிகளையும் செய்துவருகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அரச ஊழியர்களின் நிர்வாக ஆளுமையை விருத்தி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் நிர்வாக ஆளுமையை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக - உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், அரச ஊழியர்கள் மத்தியில் நவீன தொழில்நுட்பம் பற்றிய அறிவு ஏற்படுத்தப்படும். இதனால், சிறந்த சேவையை அவர்களால் ஆற்றமுடியும்.

இதற்காக, மாவட்டரீதியில் தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இவை மூலம், அரச ஊழியர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும். விரைவில் மாத்தளையில் நவீன தொழில்நுட்பப் பயிற்சி நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு இதனை அமைக்கவுள்ளது. இவ்வாறான திட்டங்கள் இனிவரும் காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படும் எனவும், அவர் தெரிவித்தார்.

# பொலிஸ்மா அதிபரின் சேவை நீடிக்கலாம்!

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவின் சேவைக்காலம், மேலும் ஒருவருட காலத்துக்கு நீடிக்கக் கூடிய வாய்ப்புக்கள் உண்டென, பொலிஸ் தலைமையக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அவரது சேவைக்காலம் ஒக்ரோபர் 17 ஆம் திகதியுடன் முடிவடைய இருப்பதால், மேலும் ஒரு வருட காலத்துக்குச் சேவைக்காலம் நீடிக்கப்பட்டால், அடுத்த ஒக்ரோபர் மாதம் வரை பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றுவார்.

ஆனந்தராஜா ஓய்வில் சென்றால், பொலிஸ் மா அதிபராகத் தகுதிகள் உடைய இந்திரா டீ சில்வா, ஜயதிஸ்ஸ ஹேரத் ஆகியோரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.





மட்டக்களப்பு மாவீரர்களின் பெற்றோர்களை, கேணல் கருணா அம்மான் சந்திக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மாவீரர்களின் பெற்றோர்ளைப் படத்தில் காணலாம்.

# வேலையில்லா பட்டதாரிகளுடன் விஜயசேகர குழுவினர் கைகலப்பு!

## ஆறு பேர் படுகாயம்

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கும், நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகர தலைமையிலான குழுவினருக்கும் இடையில்- கைகலப்புச் சம்பவம் ஒன்று, மாத்தறை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் - மாத்தறை மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் மேற்கொண்டுவரும் போராட்ட மேடையில், இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மாத்தறையைச் சேர்ந்த பட்டதாரிகள் ஒன்று சேர்ந்து - தமக்கு வேலைவாய்ப்பை வழங்குமாறு கோரி, மேடையொன்றை அமைத்து, அந்த மேடையில் போராட்டத்தினைத் தொடர்ச்சியாக நடத்தி வந்தனர்.

அறுபது நாட்கள்வரை தொடர்ந்து நடைபெற்ற இந்தப் போராட்டம், நேற்றுமுன்தினம் அமைச்சர் மகிந்த விஜயசேகர தலைமையில் நடைபெற்ற ஊர்வலம் ஒன்றினால் பாதிக்கப்பட்டது.

பட்டதாரிகள் போராட்டம் நடத்தி வரும் இடத்தை, மீனவர்களின் பிரச்சினை தொடர்பான ஊர்வலம் நடத்துவதற்குத் தமக்கு ஒருநாள் விட்டுக் கொடுக்குமாறு - நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகர நீதிமன்றில் கேட்டிருந்தார். அந்த வேண்டுகோள் நீதிவானால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

எனினும், மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக மகிந்த விஜயசேகர தலைமையில் ஒரு ஊர்வலம், நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த ஊர்வலம் - பட்டதாரிகள் போராட்டம் நடத்திவரும் மேடைக்கு முன்பாகச் செல்லும்போது, தகராறு ஒன்று ஏற்பட்டது.

மீனவர் பேரணிக்கும், போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பில், ஆறு பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயங்களுக்கும், ஏற்பட்ட கைகலப்பிற்கும் மகிந்த விஜயசேகர தான் காரணம் எனக்கூறி, அவர் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்து - பட்டதாரிகள் நீதிமன்றில் வழக்கு ஒன்றினை தொடுத்துள்ளனர்.

இதேவேளை மாத்தறையில் நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக, பொலிஸ் மா அதிபர் விசாரணைகளை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார். மாத்தறைப் பகுதி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்த விசாரணைக் குழுவில் உள்ளடக்கப்படவில்லை. காலியிலுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரே விசாரணைக் குழுவில் இடம்பெறவுள்ளார்.

# யுத்தத்தில் பெண்களும், சிறுவர்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள்!

## நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

(வவுனியா)

யுத்தத்தால் பெண்களும், சிறுவர்களுமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று, வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

கணவனை இழந்த விதவைகளும், பெற்றோரை இழந்த பிள்ளைகளும் யுத்தத்தின் வடுக்களாகும்.

இதனைத்தவிர, 20 ஆண்டுகால யுத்தத்தின் காரணமாக கலாசார சீர்கேடுகளும் இடம்பெற்றுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

"ஆயுதமோதலும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உரிமைகளும்'' என்ற தலைப்பில் நீதிவான் இளஞ்செழியன் உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். வவுனியா மாவட்ட சட்ட உதவி மன்றம் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

## கலாநிதி சொக்கலிங்கத்திற்கு 'சாஹித்திய இரத்தினம்' விருது

(கொழும்பு)

'சாஹித்திய இரத்தினம்' என்னும் விருது, கலாநிதி க.சொக்கலிங்கத்திற்குக் கிடைக்கவுள்ளது.

இலங்கை கலைக் கழகத்தின் ஏற்பாட்டில், 2003 ஆம் ஆண்டுக்கான தேசிய சாஹித்திய விழா - எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் கலாநிதி சொக்கலிங்கம் - இலங்கை கலைக் கழகத்தினால் 'சாஹித்திய இரத்தினம்' என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை 4 மணியளவில் ஆரம்பமாகும் இவ்விழாவில் - மங்கள விளக்கேற்றல், சரஸ்வதி துதி ஆகிய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, வரவேற்புரையினைக் கழகத் தலைவர் பேராசிரியர் அநுராத செனவிரத்னவும், விசேட உரையைப் பேராசிரியர் பீ.பீ.மீகஸ்கும்பரவும் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும், விருது வழங்கிக் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது. லக்ஷ்மன் பெரேராவின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெறும்.

## வேலணையில் உதைபந்தாட்டப் போட்டி

(நெடுந்தீவு)

தீவகத்தில் பழம்பெரும் பாடசாலைகளான - வேலணை மத்திய கல்லூரிக்கும், ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும் இடையிலான சிநேகிதபூர்வ உதைபந்தாட்டப் போட்டி - இன்று வெள்ளிக்கிழமை 1.30 மணியளவில் வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த உதைபந்தாட்டப் போட்டியில் - 14, 16, 18, 20 வயதிற்கு உட்பட்ட அணிகள் மோதவுள்ளன.

## மாவீரர்களின் பெற்றோர்களை கிழக்கு தளபதி கருணா சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்களுக்கும்-கேணல் கருணாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் கரடியனாறு தேனகம் விடுதியில் இடம் பெற்றது.

நேற்றுமாலை 7 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ், துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் கிருஷன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பிறேமினி, வாகரை அரசியற்துறைப் பொறுப்பாளர் தோத்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில், 200 இற்கு மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

இந்தச்சந்திப்பில், மாவீரர்களின் பெற் றோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான நிலை மைகளை கருணா அம்மான் கேட்டறிந்தார்.

## மீளக்குடியேறிய மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் உதவி!

(மட்டுவில்)

கடந்தகால யுத்த அனர்த்தங்களின்போது, இடம்பெயர்ந்து குடாநாட்டுக்கு வெளியே வன்னிப் பெருநிலப்பரப்பிலும் மற்றும் பிற மாவட்டங்களிலும் தங்கியிருந்து, தற்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியவர்களுக்கு யு. என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினால் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் நேற்று இடம் பெற்ற இந்த நிகழ்வில், மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட குடும் பத்தவர்கள் மேற்படி உதவிப் பொருட்களைப் பெற்றுக்கொண் டனர்.

யு.என்.எச்.சி.ஆர் நிறுவத்னத்தினால் பாய், வாளி, பிளாஸ்ரிக் பேசின், அலுமினியச்சட்டிகள், நுளம்பு வலை, கூரை விரிப்பு, சவர்க்காரம், சாறி, சாரம் போன்ற உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. (24)




வதிரீ ஸ்ரீ பரமானந்தா சிறுவர் - முதியோர் இல்லத்திற்கு, இந்து கலாசார அமைச்சு பஸ் ஒன்றை வழங்கியுள்ளது. இந்த பஸ் வண்டி வழங்கும் வைபவத்தில் ஆச்சிரம செயலாளர் எஸ்.சுந்தரலிங்கம் உரையாற்றுவதையும், ஆச்சிரம அறங்காவலர் வைத்திய கலாநிதி எஸ.பத்மநாதன், விழாவுக்குத் தலைமைவகித்த சிவஸ்ரீ நமசிவாயக் குருக்கள், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# காரைநகர் கடற்கரையோரங்களில் புதிதாக மிதிவெடிகள் தென்படுகின்றன

## மக்கள் புகார் தெரிவிப்பு

(காரைநகர்)

காரைநகர் வடக்கு கடற்கரையோரங்களில், புதிதாக மதிவெடிகள் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, காரைநகரின் குறிப்பிட்ட பிரதேசத்தில் கடற்கண்ணி வெடிகளும், பொறிவெடிகளும் ஒதுங்கிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இடம்பெயர்ந்த மக்கள், தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறிவரும் நிலையில், இந்தச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் அதிர்ச்சியினையும், பயத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், காரைநகர் பிரதேசத்தில் - அண்மைக்காலமாக மிதிவெடிகளினால் ஏற்படும் ஆபத்துக்களும் அழிவுகளும் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அச்சுவேலியில் இலவச மருத்துவசேவை

(அச்சுவேலி)

அச்சுவேலி தெங்கு, பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன், யாழ். மாவட்ட சித்த மருத்துவக்கூட்டுறவுச்சங்கத்தால், கடந்த திங்கட்கிழமை புத்தூர் பிரதேசசபைக் கட்டடத்தில் நடாத்தப்பட்ட இலவச மருத்துவ சேவையில், புத்தூர் பிரதேசசபைக்குட்பட்ட பெரும்பாலான வறிய மக்கள் தங்களது நோய்களுக்கான மருந்தினைப் பெற்று நன்மையடைந்துள்ளார்கள்.

இதுபோன்ற இலவச சேவைகளை வறிய மக்களின் நலன் கருதி, அச்சுவேலி தெ.ப.பொ.அ.கூ. சங்கத்தின் எல்லைப் பரப்புக்குள் காலத்துக்குக்காலம் நடத்தவுள்ளதாக, சங்க வட்டாரங்கள தெரிவித்தன.

## கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரிக்கான கற்கைநெறி விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்ப கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. கீழ் குறிப்பிட்ட கற்கை நெறிக்கு தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேசிய சான்றிதழ்களுக்கான ஆங்கில கற்கை நெறி (என்.சி.இ), மரவேலை தொழில்நுட்பப் பயிற்சி நெறி விண்ணப்பங்கள் யாவும் 25.09.2003 இற்கு முன்னர் அதிபர் தொழில்நுட்பக் கல்லூரி, கிளிநொச்சி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்

ஆங்கில கற்கை நெறி பகுதிநேர விரிவுரையாக நடைபெறவிருப்பதால், தொழில் புரிபவர்களும் விண்ணப்பிக்கலாமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

## மல்யுத்தப் போட்டிகளில் முல்லை வீரர்கள் பங்கேற்பு

(முல்லைத்தீவு)

மாகாண மட்டத்திலான மல்யுத்தப் போட்டி, கடந்த 30 ஆம் திகதியன்று, மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து முதன்முதலாக இந்தப் போட்டியில் ஏழு பேர் பங்குபற்றினர். இந்த மாகாண மட்ட போட்டியில்- எஸ்.ஜெனிபேட், ம.அருள், அ.இராஜன் ஆகியோர் முதலாம் இடத்தையும், ச.சதீஸ்குமார், த.சேக்ஸ்பியர், ப.பிரதாபன், ச.நிக்ஸன் ஆகியோர் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்படி போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற எஸ்.ஜெனிபேட் மாகாண மட்டத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (17)

## சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே போட்டிகள்!

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களுக்கிடையே வழமைபோல் இந்த வருடமும் கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இந்தப் போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்டு, வெற்றிபெறும் மாணவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மாணவர்கள் தங்களது கட்டுரைகள், கவிதைகளைத் பாடசாலை அதிபர்களிடம் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பாக கையளிக்கும்படியும், பிரதியினை தங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு, சிறுவர் பராமரிப்பு நன் னடத்தை உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

இந்தக் கட்டுரை, கவிதைகளின் தலைப்பு 'சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுத்தல்' என்பதாகும். கட்டுரைகள், கவிதைகள், சிறுவர் உரிமைகள் அவற்றினைப் பாதுகாத்தல் என்பவற்றைப் பிரதிபலிககும் வகையில் இருத் தல் வேண்டும் என, சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை உத்தியோ கத்தர் கேட்டுள்ளார். (17)

## கண் சிகிச்சைக்கு சமுகமளிக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் கண் 'கற்றாக்' சத்திரசிகிச்சை செய்யப் பதிவுகளை மேற்கொண்டவர்கள், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள கண் கிளினிக் சிகிச்சைக்கு சமுகமளிக்கும் வண்ணம் வைத்திய கலாநிதி ச.விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார். (17)

வாழ்க வளமுடன்

பிறந்தநாள் வாழ்த்து

இரண்டாவது அகவையில்

பெயர் : சு.சஜித்தா,
முகவரி : மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றார் ஒப்பம்

# கடமை உணர்வுமிக்க பெண்கள் சமுதாயத்தில் உருவாகவேண்டும்




பெண்ணியம், பெண்களுக்கான சமவுரிமை என இன்று உலக அரங்கிலே வெகுவாகப் பேசப்படுகிறது. இந்தக் காலச் சூழ்நிலையில் இவை பொருத்தமா என்பது விவாதத்திற்குரிய விடயமாகும். இந்த நிலையில், எமது 'சிநேகிதியே' பகுதிமூலமாக, வாரந்தோறும் வாழ்விலே உயர்நிலையடைந்த பெண்களின் அனுபவங்களை, வாழ்விலே உயர்வடையத் துடிக்கும் பெண்களுக்காகத் தொகுத்துத் தருகிறோம். இம்முறை யாழ். பல்கலைக்கழக பிரதம நூலகர் திருமதி றோகினி பரராஜசிங்கம் அவர்களுடனான நேர்காணல் ....

காலை வெய்யில் கதகதக்கும் நேரத்தில், பல்கலைக்கழகத்தை நோக்கி எமது பயணம் ஆரம்பமாகிறது. விஞ்ஞானபீட வாயிலுக்கூடாக உள்நுழைந்து, துவிச்சக் கரவண்டியை ஓரமாய் நிறுத்துகிறோம். பல்கலைக்கழக நூலக வாயிற்படிகளில் நடந்து, வாசலிலிருந்த பாதுகாப்பு



உத்தியோகத்தரிடம் வந்த விடயத்தைக் கூறுகிறோம்.

அவர் வழிகாட்டுகிறார். நூலகத்திற்குள்ளே பிரவேசித்ததுமே - அமைதி. இடையிடையே சில செருப்புகள் நிலத்தோடு போராடும் ஓசையைத் தவிர, வேறெதுவும் செவிகளில் விழவில்லை. நூலகப் பணியாளருள் ஒருவர் எம்மை வழிமறிக்க, அதற்கிடையில் தெரிந்த முகமொன்று வழியைக்காட்ட, வளைந்து நெளிந்துசென்று, நாம் தேடிவந்த இடத்தை அடைந்துவிட்டோம்.

தொலைபேசியில் முன்னரே தொடர்பு கொண்டமையால், எங்களைக் கண்டவுடனேயே "வாங்கோ" என அன்பாக வரவேற்றார் திருமதி. றோகினி பரராஜசிங்கம். அமைதியான முகம், கல்விக்களை தெரியும் பொலிவு, அன்பான வார்த்தைகள், எமக்கு ஆழமான கருத்துக்கள் கிடைக்கும் என்னும் தெம்பைத் தந்தன.

எம் கண்கள் அவர் சூழலைக் கண்டபோது, பாரம்பரிய சொத்துக்களின் பரிணமிப்பு, அழகான வேலைப்பாடுகள் கொண்ட தளபாடங்கள், அதில் ஒன்றில் நிமிர்ந்து நிற்கும் சேர்.பொன் இராமநாதனின் சிலை, புத்தக அலுமாரிகள், தொலைபேசி, பக்ஸ் எனப் பலவித ஊடகங்களும் பரவி இருந்தன.

தங்களைப் பற்றி வாசகர்கள் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒரு அறிமுகம் செய்யுங்கள் என ஆரம்பித்தோம்.

தனியார் பாடசாலைகளிலே ஆசிரியையாக ஆரம்பித்த எனது பணி - 1972 ஆம் ஆண்டு முதல் நூலகசேவையிலே இணைந்துகொண்டது. பின், அது தொடர்பான நூலக விஞ்ஞான கல்வித்துறையை முடித்துக்கொண்டு, யாழ்.பல்கலைக்கழக நூலகத்தில் உதவி நூலகராக இணைந்து கொண்டேன். எனது கணவர் ஒரு தபாலதிபராகக் கடமைபுரிகிறார். எனக்கு இரு பெண் பிள்ளைகள். ஒருவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார் எனச் சுருக்கமாக முடித்தார்.

பெண்கள் நிர்வாகம் செலுத்துவது அதாவது, நிறுவனங்களில் தலைமைப் பொறுப்பு வகிப்பது தொடர்பாகத் தங்கள் கருத்து யாது என வினவியபோது -

மிகவும் துடிப்பான்முறையிலே தனது பதிலினை ஆரம்பித்தார்.

எதற்காக ஆண், பெண் எனப் பிரித்துப் பார்க்கின்றீர்கள். மனிதன் என்றரீதியில், ஆணைப்போல நிர்வாகம் செலுத்தும் தன்மை பெண்களுக்கும் உண்டு. அது அவர்களது உரிமையும்கூட. தலைமைத்துவம் என்னும்போது, கல்வியறிவு மட்டும் அதிலே செல்வாக்குச் செலுத்துவதில்லை. அநேக பிறவிடயங்களும் அதிலே தமது தாக்கத்தைச் செலுத்துகின்றன. உதாரணங்களாக - ஒரு மனிதனின் தனிப்பட்ட குணநலன், அவரது குடும்பப் பின்னணி, பாடசாலை வாழ்விலே வெளிப்பட்ட அவரது ஆளுமை, அவரதும், அவர் சார்ந்த சூழலினதும் கருத்தியற்சிந்தனை எனப் பலவற்றைக் கூறமுடியும்.

உத்தியோகம் புருஷலட்சணம் என்று கூறுகிறார்கள். அந்த மரபு - கருத்தியல்கள் மூலமே உருவாக்கப்பட்டது. ஏனென்று சொன்னால், எமது சமுதாயச் சூழலிலே பெண்ணின் அக ஆளுமைத்திறன்கள் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டவையாகவே உள்ளன. இதனால், ஒரு சிறந்த நிர்வாகியாக உருவாவதற்கு ஆணைவிட, பெண் அதிக தடைக்கற்களைத் தாண்ட வேண்டியுள்ளது. பொதுவாகச் சொல்வதாக இருந்தால், நிர்வாகம் செலுத்துவதில் பால் பாகுபாடு இல்லை. அவ்வாறு பார்க்கவும்கூடாது. வழங்கப்படுகிற சந்தர்ப்பங்களும், பின்னணிகளும் தான், ஒரு ஆணையோ அல்லது பெண்ணையோ சிறந்த நிர்வாகியாக உயர்த்துகின்றன என்றார்.

குடும்பப் பொறுப்பையும், அரச பணியையும் எவ்வாறு எதிர் நோக்குகின்றீர்கள்?

நல்லதொரு கேள்வியைக் கேட்டுள்ளீர்கள். பொருத்தமான, அதேவேளை கேட்கப் படவேண்டிய கேள்வியும்கூட - என்றவர் தொடர்ந்து இது இரட்டைச்சுமை பற்றிய வினாவாகும். என்னுடய கருத்து எதுவென்றால், வீடு அல்லது அலுவலகத்தின் ஏதோ ஒன்றில் மட்டுமே ஒரு பெண்ணால் நிறைவான பணியைச் செய்ய முடியும். குடும்பப் பொறுப்பை ஒரு பெண் நிர்வாகி முழுவதுமாகக் கவனிக்க நேர்ந்தால், அரசபணி நிச்சயமாகப் பாதிக்கப்படும். நல்லதொரு நிர்வாகிக்கு நல்லதொரு குடும்பச் சூழலும், வீட்டில் மன அமைதியும் அவசியமானவை. இதனைக் குடும்ப அங்கத்தவர்கள் உணர்ந்துகொண்டு, சாதாரண ஒரு குடும்பத் தலைவியிடம் எதிர்பார்க்கும் அத்தனை விடயங்களையும் எதிர்பாராது, புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும்.

பெண்ணைத் தனியே குடும்பத்தலைவியாக மட்டுமே பார்த்துப் பழகிய, சமூகத்தில் அரச பணிக்குப் பெண் முதன்மை கொடுக்கும்போது, சிலரின் புரிந்துணர்வற்ற கருத்துக்கள் மனச்சோர்வை ஏற்படுத்தலாம். இவற்றை அசட்டை பண்ணப் பழகவேண்டும். எம்மைப் புரிந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்ப்பவர்களிடம் மட்டுமே விளக்கங்களைக் கூறலாம்.

எமது சமுதாய அமைப்பு - பெண்மை மீது தாய்மை என்னும் மிகப்பெரிய தலைப்பாரத்தைக் கொடுத்துள்ளது. இதனாலேயே, அநேக பெண்கள் - குடும்பத்தையும் கவனிக்க முடியாது, அரச பணிகளையும் கவனிக்க முடியாது இடைநடுவே திண்டாடுகிறார்கள். இந்த இக்கட்டானநிலை ஆண்களிற்கு இல்லை. யாராக இருந்தாலும், கடமையின்போது குடும்பப் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திப்பதையோ அல்லது குடும்பத்தோடு குதூகலமாக இருக்க வேண்டிய வேளையிலே, கடமையைப் பற்றிச் சிந்திப்பதையோ தவிர்க்கவேண்டும். இதுதான் அமைதியான வாழ்விற்கு வழியாகும்.

நாம் கடமைகளிலுள்ளபோது - பிறரது தடைகள், இடையூறுகள் ஏற்படக்கூடாது. இதனால், நான் - எனது கணவரிடம் சொல்லி வைத்துள்ளேன் - கடமையின்போது, என்னை எனது அலுவலகத்திற்குள் வந்து சந்திக்கக் கூடாதென, அதையே நானும் பின்பற்றுகின்றேன் எனக் கூறி முடித்தபோது, எமது சந்திப்பில் நல்லதொரு நிர்வாகியைச் சந்தித்த திருப்தி ஏற்பட்டது.

இந்தவேளையில்தான், இந்தக் கேள்வியைத் தொடுப்பது சரி என்பதுபோல் நண்பனின் கண்ஜாடை உணர்த்தியது. மெதுவாக, பெண்ணியம் சார்ந்த தங்கள் சிந்தனையோட்டம் எவ்வாறானதாக இருக்கின்றது என்னும் வினாவைத் தொடுத்தோம்.

புன்னகையொன்றை உதிரவிட்டவர். பின் என்னை சிக்கலில் மாட்டிவிடுவீர்கள் போலுள்ளதே என்றவாறே சிரித்தார். நாங்கள் கொடுத்த உற்சாகம் அவரைப் பேசவைத்தது.

இன்று பலரும் பெண்ணடிமை, ஆணாதிக்கம் என்னும் விடயங்கள் பற்றியே விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் அதுபற்றிப் பேசுவதற்கே அச்சப்படுகிறார்கள். என்னைப் பொறுத தவரையிலே இன்று பெண்ணடிமையாக இருந்தாலும் சரி, ஆணாதிக்கமாக இருந்தாலும் சரி குறைவு என்றுதான் கூறுவேன். இதில் பலருக்குப் பல கருத்துக்கள் இருக்கலாம். அவற்றை மறுப்பதற்கில்லை.

இன்று பெண்களிற்கு ஓரளவிறகேனும் சுதந்திரம் இருக்கிறது. சிலர் அந்த சுதந்திரத்தை வீணாக்குகிறார்கள். அவைதான் இன்று பல பிரச்சினைகளிற்கும் காரணங்களாக அமைந்துவிடுகின்றன. மரபுவழி வந்த எமது சில பண்பாடுகளையும், கலாசார விழுமியங்களையும் நாம் தூக்கி எறிந்துவிடுவது என்பது ஒரு விருப்பதிற்குரிய விடயமல்ல. எவ்வாறு எமது மரபிற்குள் நின்றுகொண்டு சுதந்திரமாக வாழ முடியுமோ, அவ்வாறு வாழப்பழக வேண்டும். இதற்கு எமது பெண்களிற்கு விழிப்புணர்வு தேவையாகிறது என நாம் எதிர்பார்த்த விடயத்தையே தொட்டு நின்றார்.

பொதுவாக, இன்று ஒரு கருத்து நிலவுகின்றது. கலாசாரம் சீரழிவதற்குப் பெண்கள் காரணமாக இருப்பதாக அதுபற்றி... என நாம் முடிக்கும் முன்னரே முந்திக்கொண்டார்.

ஏன்? ஆண்கள் கலாசாரத்தைச் சீரழிக்கவில்லையா? என ஆவேசமாகக் கேட்டபோது, தலைகவிழாத குறை எமக்கு. பின் பெண்களின் பக்கம் பலம் சேர்க்க முற்பட்டார் நூலகர். நீங்கள் கூறுவதில் தப்பில்லைத்தான் என்றபோதே, எமக்கு மீண்டும் உற்சாகம் பிறந்தது.

ஒருசில பெண்களின் நடத்தைகள் - ஒட்டுமொத்த பெண்களுக்குமே கெட்டபெயரைக் கொடுப்பதாக இருந்துவிடுகிறது. சிலர் தமக்குள்ள அதிக சுதந்திரத்தை அநாவசியமாகப் பயன்படுத்துகிறார்கள். உடை, வேறுவிடயங்களிலே தமது சுதந்திரத்தை வீணாக்குகிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும் என்னும் வேண்டுதலோடு முடித்தார்.

நூலகப்பொறுப்பு - தங்களைக் கவர்ந்தது பற்றிக் கூறமுடியுமா? என் வினவியபோது,

சிறுவயதிலேயே நான் பல நூலகங்களுக்குச் செல்வதுண்டு. எனது தந்தையார் அழைத்துச் செல்வார். நான் யாழ்ப்பாண பொதுநூலகத்தை நன்றாகப் பாவித்திருக்கிறேன். அது எரிக்கப்பட்டபோது, எனது மனமும் எரிந்தது. அந்தநேரத்தில் ஒரு உண்மை தெரிந்தது. எதை எரித்தாலும், தமிழர்களின் பரம்பரைச் சொத்தாகிய கல்வியை எவராலுமே அழிக்கமுடியாது என்பது. அது இன்றுவரை உண்மையாகவே உள்ளது.

சிறுவயதில் நூலகர்களைக் காணும்போது, நானும் அவ்வாறு வரவேண்டும் என்னும் உணர்வே, இன்று என்னை இந்த இடத்திலே இருத்தியுள்ளது. நான் இது தொடர்பாக இருவருட பயிற்சி பெறச் சென்றபோது, எனது இரு பிள்ளைகளுமே சிறியவர்களாக இருந்தார்கள். அவர்களை எனது தாயார் கவனித்துக்கொண்டு, என்னைப் பயிற்சிக்காக அனுப்பினார். தாய் - தந்தை இருவரதும் ஒத்துழைப்பும், எனது இலட்சியமுமே- இன்று என்னை 25 வருடங்களிற்கு மேலாக இந்தப் பணியிலே அமரவைத்துள்ளது என்றுதான் கூற வேண்டும்.

இறுதியாக - வளரும் தலைமுறைப் பெண்களுக்கு, தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள் என்றபோது,

துணிவையும், நேர்மையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். கடமையுணர்வு மிக்கவர்களாக உருவாகவேண்டும். சமுதாய மட்டத்திலே பிறருக்கு முன்னுதாரணமாக இருக்கவேண்டும் எனச் சுருக்கமாக முடித்தார்.

பொருத்தமான ஒருவரை செவ்விகண்ட பூரிப்பு- நெஞ்சிலே நிறைய, இருவரும் அலுவலகம் நோக்கி மீண்டும் பயணிக்கிறோம் பல்கலைக்கழக வீதியூடாக.

**நேர்காணல்: இ.சர்வேஸ் - பூ.நகுலன்**

**எமது சமுதாய அமைப்பு பெண்மை மீது தாய்மை எனும் மிகப்பெரிய தலைப்பாரத்தைக் கொடுத்துள்ளது. இதனாலேயே அநேக பெண்கள் குடும்பத்தையும் கவனிக்கமுடியாது, அரச பணிகளையும் கவனிக்க முடியாது இடைநடுவே திண்டாடுகின்றார்கள்.**

## கர்ப்பிணிப் பெண்கள் கவனத்திற்கு



★ தாய்மை அடைந்தவர்கள், மாம்பழம், பலாப்பழம், பப்பாளிப் பழம், புளிப்பான எலுமிச்சை ஆகிய பழங்களை உட்கொள்ளக் கூடாது. இதனால் இருமல், சளி ஏற்படலாம்.

★ கடினமான பயணங்களைத் தவிர்க்க வேண்டும். ஆட்டோ, பஸ்ஸில் கடைசியிருக்கையில் இவைகளில் பிரயாணம் செய்யக்கூடாது. விமானப் பிரயாணம் தவிர்க்கப்பட வேண்டும்.

★ முதல் சில மாதங்கள் வாந்தி அதிகம் இருந்தால், சிறுகச் சிறுக உணவைக் குறைந்த இடைவெளியில் உட் கொள்ளலாம்.

★ நல்ல புத்தகங்கள் படிக்கவேண்டும். நல்ல இசையைக் கேட்கவேண்டும். வயிற்றில் வளரும் குழந்தைச் செல்வத்துக்கு அந்த நல்ல இசையைக் கேட்கும் சக்தியுண்டு.

★ அயடின் குறைவு ஏற்பட்டால், கர்ப்பச் சிதைவு ஏற்படும். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு - மூளை வளர்ச்சியின்மை, உடல் வளர்ச்சியின்மை ஏற்படுகிறது. மேலும், குழந்தை களின் இறப்பு விகிதமும் அதிகரிக்கிறது.

★ உடலுக்குத் தேவையான, மிக அத்தியாவசியமான சத்துக்களில் அயடின் மிக முக்கியமானது. கழுத்துக்குக் கீழேயுள்ள தைரொட்சின் சுரப்பி, உடலுக்குப் போதுமானளவில் தைரொட்சின் என்னும் ஓமோனைச் சுரப்பதற்கு அயடின் சத்துமிக்க அவசியம்.

★ தைரொக்சின் ஓமோன் நம் உடல் அன்றாடம் சரியாக இயங்குவதற்கு உதவுகிறது. நம் உடல் வெப்பநிலையை ஒழுங்குபடுத்துவதில் பெரும்பங்கை வகிக்கிறது.

★ நமது உடல் மிக விசித்திரமானது. சில சமயங்களில் நாம் மிக ஆவலுடன் ஒரு பழம் அல்லது உணவுப்பண்டம் எதையாவது உண்ண விரும்பினால், நம் உடலுக்கு அதிலுள்ள சத்து இன்றியமையாதது என்றே பொருள் ( விருப்பத்திற்கு சாப்பிடுவதைக் கணக்கில் சேர்க்காதீர்கள்).

★ கர்ப்பிணிகள் இருக்கும்போது, நீங்கள் கரும்பச்சை நிறமான கீரை வகைகளையும் (கரட் போன்ற) மஞ்சள் நிறமான காய்கறிகளையும், பழங்களையும் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

★ ஒரு பெண் கருவுறும்போது, மூன்றாம் மாதத்தில் கருவிலுள்ள குழந்தையின் பற்களின் அஸ்திவாரம் தோன்ற ஆரம்பிக்கிறது. பற்களின் பாதுகாப்பு அப்போது முதலே ஆரம்பிக்கிறது. அந்த நேரத்தில் கர்ப்பிணிப் பெண்கள் கல்சியம், புரதச்சத்து நிறைந்த உணவு வகைகளையும், இச்சத்து நிறைந்த பாலையும் பருகுவது அவசியம்.

★ கல்சியம், விற்றமீன் A யும், C யும் குறைவதனால்தான், பற்களில் பெரும்பாலான குறைபாடுகள் தோன்றுகின்றன.

"சீதனம்" என்பது நம்மவர்கள் மத்தியில் இன்று நேற்றல்ல, நெடுங்காலமாகவே வித்திடப்பட்ட விருட்சம். எவ்வளவு தூரம் அதனால் பாதிப்பு உண்டு என்பதை யாரும் நினைப்பதில்லை. வெளி
நாட்டு

குகளுக்கு மேலாகச் செலவாகி, கடனாளி ஆகின்றாள். இந்தச் சீதனம் என்ற சீத்துவத்தினால், எத்தனை பேரின் வாழ்க்கை இன்னுந்தான் கேள்விக்குறியாகவே உள்ளது. சீதனம் கேட்பது - பெண்

போயுள்ள காணிகள், வீடுகளின், சொத்துக்களின் நிலை என்ன? இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட சொத்துக்களின் நிலை என்ன? சீதனம் கொடுக்க வசதியின்றி ஏங்கி, மரணித்த பெற்றோரின் மனம் என்ன?

# திருமணம் சொர்க்கத்தில் அல்ல



மாப்பிள்ளை, உயர் உத்தியோகம் என்று தொடரும் சூதாட்டம்.

இந்தச் சூதாட்டம் ஓர் கௌரவம் என்றுதான் நினைக்கின்றனரேதவிர, அதனை அசிங்கம், கோழைத்தனம் என நினைப்பதில்லை. திருமண வாழ்க்கைக்குத் தயாராகும் பெண்களுக்கான தடைக்கல்லாகவே சீதனம் - இன்று வரை தொடர்கிறது. சீதனத்தினால் பெண்கள் - ஆண்களின் ஒடுக்குமுறைக்குள்ளாகும் நிலையே

எனச் சிலர் வாதிடுவ துண்டு. ஆனால், இதனை ஒருதுளிகூட ஏற்கமுடியாது. ஆண்மகன் அதறகு உடன்போகச் சம்மதிப்பதனால் தான், பெண் சமூகமும் அப்படியே தொடர்கின்றனர். எப்போது அவன் தன் உள்மனதினால், புரிந்துணர்வுடன் திருமணம் இரு மனதினதும் இணைபபு, சீதனம் நிச்சயப்படுத்துவதில்லை என்பதை உணர்கின்றானோ, அப்போது தான் அவன் - பெண் சமூகம் மீது குற்றம் சுமத்த

# ரொக்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது

அதிகம் ஏற்படுகிறது. ஆண்கள் தமது சொத்துக்களினை அதிகரிக்கும் நோக்கில், பெண்களின் சொத்துக்களைப் பெறத் தலைப்பட்டுள்ளனர். இதனால், அவள்- அவனிடம் தங்கி வாழநேரிடுகிறது. முக்கியமாகச் சமூக, பொருளாதாரப் பிரச்சினையை உண்டுபண்ணி வைததுள்ளதால், அநேகரின் வாழ்க்கைகூட, கேள்விக்குறியாகவே உள்ளது.

ஓர் பெண்ணை வாழ்விக்கத்தான் திருமணம் என்பார்கள். திருமணம் மட்டுந்தான் வாழ்வு அல்ல. அது ஓர் துணை மட்டுமே. ஆண் விலை பேசப்பட்டு, பெண்ணுக்கு விற்கப்படுகிறான். ஆனால, அடிமையாவது பெண். ஓர் ஆண் மகனை - பெற்றோர் எப்படிச் சீரும்சிறப்புமாக வாழ்வதற்குத் துணையாக உள்ளனரோ, அப்படித்தான் பெண் பிள்ளையையும் உயர் கல்வி தொடக்கம், மேல் நிலைகளிற்கு இட்டுவைத்துள்ளனர். ஆனால், அவள் எவ்வளவு தூரம் உயர்கின்றாளோ, அவ்வளவு தூரம், அவளின் துணையைப் பெறுவதற்குப் பல மடங்

முடியும். ஓர் பெண்ணிடம் சீதனம் கேட்கும் அதே தொகை பெறுமதியை, ஓர் பெண்- ஆணிடம் முதுசமாகக் கேட்டால், இன்று எத்தனை ஆண்கள் தயார்? யாரினதும் சொத்துதானே எப்படியும் விரும்பினால், தரத்தானே வேணும் என்றரீதியில், 'அவா'வில் நினைப்பதைக் கேட்டு, ஒற்றைக்காலில் நிற்பதுதான் இன்றைய திருமணம். அதிலும் தரகர் திருமணம் இன்னும் விசேடமானது. ஆண்பகுதியால் குறிபபிடும் சீதனத்தைவிட, தரகுக்கூலியும் சேர்த்து விலை பேசப்படுவது நிகழ்கிறது. பொய்யோ, புரட்டோ சடைஞ்சு - தன்னுடைய வருமானத்தில் இலக்காக இருக்கிறார் தரகர்.

எத்தனையோ குடும்பத்தில் பெற்றோர்கள் தமது நியாயமான தேவைகள் இருந்தும், அவற்றைச் செய்ய முடியாமல் வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி - பொருள், பண்டம் என்று சேர்த்தனர். இன்று அவற்றின் நிலைமைகள் வடபுலத்தில் எப்படியுள்ளது? கண்மண் தெரியாமல், சொத்துக்களைச் சீதனமாக வாங்கிவிட்டு, குடும்பமாக வெளிநாடு செல்ல, திரும்பிப்பார்க்க யாருமற்று, சிதைந்து

வெளிநாட்டில் திருமணம். ஆனால், இலங்கையில் காணி, வீடு... எழுத்தில் இருக்கவேணும். இவையெல்லாம் ஓர் குடும்பத்தைக் குறிப்பாக- வசதியற்ற, குடும்பங்களை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதைத் தான் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

இரண்டு மனங்களும் ஒன்றுசேரும் போது, உண்மையான இல்லறத்தைக் காணலாம். ஆனால், சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது திருமணம் என்ற வாக்குக்கூட, இன்றைய சமூகத்தில் பொய்த்துத்தான் விட்டது. இன்று சீதனத்தில் நிச்சயிக்கப்படுகிறது திருமணம். திருமணம் என்றால் என்ன? ஏன்? எப்படி வாழ்வது என்றெல்லாம் திட்டம் இருப்பின், குறிப்பாக சீதனத்தின் மாயையை ஆண்களால் வெல்ல முடியும். பலிக்கடாவாகப் பயன்படுத்தப்படுவது இங்கு ஆணாகத்தான் உள்ளது. பெண்கள் இந்தவிடயத்தில் சிந்திப்பதாயின், அது ஆண்களாலும் முடியும்.


**தர்மினி பத்மநாதன்**
**யாழ். பல்கலைக்கழகம்**

# குழந்தை நலம்

## தாய்ப்பால் முதல்

## முதலுதவி வரை

# புட்டிப்பால்



குழந்தை பிறந்ததுமுதல் நான்கு மாதங்களுக்குத் தாய்ப்பால் மட்டுமே போதுமானது. அதற்குப்பின்பு, பசுப்பால் அல்லது வேறு எந்தவகை புட்டிப்பாலானாலும் கொடுக்கலாம்.

ஒன்றை நினைவில் வைத்திருப்பது நல்லது. பாலில் கல்சியம் அதிகம். பலவித விற்றமின்களும் உண்டு. ஆனால், பாலில் இரும்புச்சத்துக் கிடையாது. குழந்தை நன்கு வளர, இரும்புச்சத்துத் தேவை. இரும்புச்சத்து அடங்கிய விற்றமின் சொட்டுமருந்துகள் உண்டு. அவற்றைக் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

தாய்ப்பால் சுரக்காவிட்டால், என்ன செய்வது? பசுப்பால்தானே அடுத்த தெரிவு அல்லது புட்டிப்பால் போன்ற பால் வகைகளைக் கொடுக்கலாமா? இதில் எதைக் கொடுக்கலாம். ஆனால், பால் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

பால்மா கொடுக்கும்போது, ஒரு விடயத்தை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். எந்தளவு பால் மாவுக்கு எவ்வளவு நீர் கலக்க வேண்டும் என்பது போன்ற விபரத்தை - பால்பெட்டியின் மேற்பகுதியிலேயே அச்சடித்திருப்பார்கள், அதன்படி செயற்படுங்கள். (முதல் இரண்டு மாதங்களுக்கு வேண்டுமானால், பாலில் நீர் கூடுதலாகச் சேர்க்கலாம்).

பால்மா தயாரிப்பாளரின் ஆலோசனையை அப்படியே பின்பற்றுங்கள். காரணம், பலவித சோதனைகளுக்குப் பின்பு, அனுபவபூர்வமாக வந்த தீர்மானமாக அது இருக்கும்.

முடிந்தவரை நள்ளிரவில் பால் கொடுப்பதைத் தவிருங்கள். காரணம், நாளடைவில் குழந்தையின் பற்களில் சொத்தைவிழ இது காரணமாக அமையலாம் என்பதோடு, பால- காதுகளுக்குள் நுழைந்து அப்படியே அசையாமல் குழந்தை தூங்கிவிடலாம். காதில் சில தொற்று நோய்கள் உண்டாவதற்கு இது வாய்ப்பாகிவிடும்.

தாய்ப்பால் சுரந்தும், சில குழந்தைகளுக்கு அது ஒத்துக்கொள்ளாமல் போய்விடுகிறது. என்ன காரணம்? பாலில் லக்டோஸ் என்பதுதான் முக்கிய பொருள். குழந்தைகளுக்குத் தொடர்ந்து வயிற்றில் ஏதாவது கோளாறு என்றால், இந்த லக்டோஸ் சத்தைக் குழந்தையால் ஜீரணிக்க முடிவதில்லை. இதனால் வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.

ஆனால், ஒன்று - வயிற்றுப்போக்கை மட்டும் வைத்துக் கொண்டு, குழந்தைகளுக்குப் பால் ஒவ்வாமை என்று முடிவெடுப்பது தவறு.

குழந்தை பிறந்ததும் இரண்டிலிருந்து, ஆறு வாரங்கள் வரை தாய்ப்பால் ஊட்டும்போது, அஜீரணக்கோளாறு ஏற்பட்டால் மட்டுமே அப்படியொரு முடிவுக்கு வரலாம்.

வேறு சில சந்தர்ப்பங்களிலும், தாய்ப்பால் ஊட்டமுடியாத துரதிர்ஷ்டமானநிலை ஏற்படக்கூடும். தாய்க்குப் புற்றுநோய், அதற்கெதிராகத் தொடர்ந்து மருந்து சாப்பிட வேண்டியநிலை அல்லது அவளுக்கு மனஇறுக்கம் போன்ற மனநோய்க் கோளாறுகள் காரணமாகத் தொடர்ந்து மருந்தை உட்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தாய்ப்பால் ஊட்டலாமா? என்பது தொடர்பாக, வைத்தியரை அணுகி, ஆலோசனையைப் பெற்று, ஒரு முடிவுக்கு வரமுடியும்.

# மருத்துவ

பெண் நோயியல் தொடர்பாக, எமது வாசகர்கள் அனுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார்கள் பெண் நோயியல் வைத்திய நிபுணர் - Dr.G.பவானி மற்றும் Dr.A.கெனத் ஆகியோர்.

**வெள்ளைபடுதலும், அதனுடன் இரத்தப்போக்கும் ஏற்படக் காரணம் என்ன? இது நோயின் வெளிப்பாடா?**

வெள்ளைபடுதலானது ஒரு பொதுவான நிகழ்வாகும். இது மாதவிலக்குக்காலம், கருத்தரித்திருக்கும் காலங்களில் - அளவில் சற்று அதிகமாகக் காணப்படும். இது நிறமற்ற, மணமற்ற தன்மையைக் கொண்டிருக்கும். ஆனால், சிலரில் இது துர்நாற்றமுள்ளதாக மற்றும் தயிர் போன்ற அல்லது பழுப்பு மஞ்சள், பச்சை கலந்ததாகக் காணப்படின், அது ஏதாவது ஒரு கிருமித்தொற்றினால் உண்டானதாக இருக்க முடியும். எனவே, இதற்கு மருத்துவ உதவி அவசியமாகும்.

நடுத்தர வயதுப் பெண்களில் வெள்ளைபடுதலுடன் சிறிது குருதிப்போக்கும், அதிக துர்மணமும் ஏற்படின், அது கருப்பைக் கழுத்துப் புற்றுநோயின் ஒரு முக்கிய அறிகுறியாகக் கொள்ளமுடியும். எனவே, உடன் மருத்துவ உதவியை நாடுவது அவசியமாகும்.

# ஆலோசனை

**டேம்பன் (Tampon) பாவிப்பதனால், என் கன்னித்தன்மையில் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா?**

இல்லை. கன்னித்தன்மையில் பாதிப்பு ஏற்படுவதில்லை.

**நான் கருவுற்றிருக்கிறேன் என்று டொக்டர் சொல்கிறார். மூத்த குழந்தைக்கு எட்டுமாதம்தானாகிறது. அதனால், இப்போதைக்கு வேறு குழந்தை வேண்டாம் என்று நினைக்கிறேன். Medical Termination of Pregnancy செய்வதன் மூலம் கர்ப்பப்பையில் ஏதாவது தாக்கம் ஏற்படுமா?**

**Medical Termination of Pregnancy** அதாவது, மருத்துவக் காரணங்களிற்காகக் கருச்சிதைவு என்பது, தாயின் வயிற்றில் வளரும் சிசுவினால், அது உயிருக்கு ஆபத்து எனக் கருதும் பட்சத்தில் மாத்திரம் - அடிப்படையில் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளப்படும் கருச்சிதைவைக் குறிக்கும். இதைத்தவிர, வேறெந்தக் காரணத்திற்காகவும் கருச்சிதைவைச் சட்டபூர்வமாக மேற்கொள்ளமுடியாது. அவ்வாறு மேற்கொள்ளப்படும் கருச்சிதைவானது, **Criminal abortion** எனப்படுகிறது. இதுவொரு **Criminal** குற்றமாகும். எனவே, கருவை அழிக்கும் உங்கள் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு, அதை நல்லமுறையில் வளர்க்க முற்படுவதே சிறந்தது. மாறாக, சட்ட விரோதமாகக் கருவை அழிக்கமுற்படின், அதனால் பல பாதகமான பக்கவிளைவுகள் எற்படும் (பக்கவாதம் முதல் மரணம் வரை) என்பதை மனதில் கொள்ளுங்கள்.

**பெண்நோயியல் சம்பந்தமான பிரச்சினைகள், சந்தேகங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தால், அதற்கான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.**

சிநேகிதியே
"நமது ஈழநாடு"
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# பொன்மொழிகள்

துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால், அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே.

(பெஞ்சமின்)

ஒவ்வொரு பொருளின் விலையும் தெரிந்திருக்கலாம். ஆனால், அந்தப் பொருளின் சரியான மதிப்புத் தெரியாமல் இருந்தால், பயனில்லை.

(ஆஸ்கார் ஒயில்டு)

நல்லவராய் இருப்பது நல்லதுதான். ஆனால், நல்லது, கெட்டது தெரியாத நல்லவராய் இருப்பது ஆபத்தானது.

(பேர்னாட்ஷா)

யார் ஒருவன் தனக்குள்ள கௌரவமும், மரியாதையும் போய்விடுமோ என்று பயந்தபடி இருக்கிறானோ, அத்தகையவன் அவமானத்தைத்தான் அடைகிறான்.

(விவேகானந்தர்)

நீங்கள் உங்களைச் சாதாரணமானவர்களாகக் கருதவேண்டாம். ஏனென்றால், இந்த உலகமே உங்களுடைய தேவைக்காக அல்லவா விரிந்துகிடக்கிறது.

(பெர்ஷியன் பழமொழி)

நீ யாரைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறாய் என்பதை, மிகவும் நுணுக்கமாய் கண்டுபிடிப்பதில் இறங்காதே.

(நீஷே)

மற்றவர்களுக்கு ஏற்பாட்டால் அதைக் குற்றம் என்று நாம் எண்ணுகிறோமோ, அதுவே நமக்கு ஏற்பட்டால் சோதனை என்று அழைக்கிறோம்.

(எமர்சன)

நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால், உன்னுடைய கால்களால் நடந்துபோ. ஏனையோரின் முதுகின்மேல் ஏறிப்போக விரும்பாதே. அது உனக்கு ஆபத்து.

(நியேட்சே)

மலையின் உச்சியை அடைகிற வரைக்கும், மலையின் உயரத்தை அளக்காதே. உச்சியை அடைந்தபின், அது எவ்வளவு சிறியது என்பதை அறிவாய்.

(யாரோ)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அறன்அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்*
*திறன்அறிந்தான் தேர்ச்சித்துணை.*

- திருக்குறள்

## நமது நோக்கு

# யதார்த்தத்திற்கு முரணான அமைச்சர் பீரிஸின் கருத்துகள்

சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப கருத்து என்ற வகையில் எதையாவது கூறியோ, அறிக்கையென்ற பெயரில் எதையாவது விடுத்தோ, அரசியல் சமாளிப்புக்களை மேற்கொள்வதில் அமைச்சர் பீரிஸ் வெகுசமர்த்தர்.

முன்னர் சந்திரிகாவின் அமைச்சரவையில் இனவிவகாரங்களுக்கான அமைச்சராக இருந்து, அதிகாரப் பரவலாக்கல் தீர்வுப் பொதியை - சமாதானத் தீர்வுக்கான மந்திரச் சாவி இதற்குள்தான் இருக்கிறதெனக் கூறிக்கொண்டு- சமாதானத்திற்கான யுத்தத்தை சந்திரிகா முனைப்புடன் முன்னெடுத்த காலத்தில் - உலகெல்லாம் வலம் வந்து அமைதித் தீர்வு பற்றி நாளொரு அறிக்கையும், பொழுதொரு கருத்துமாக பொழிந்து தள்ளிய பெருமைக்குரியவரும் பீரிஸ்.

பின்னர் தூக்கிய பொதியை தொப்பெனப் போட்டுவிட்டு, சந்திரிகாவுடன் முரண்பட்டு அவரைக் கடுமையாக விமர்சித்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவி - ரணிலின் பின்னால் மீண்டும் சமாதானப் பஜனைப் பாடல்களைப் பாடி வலம்வருவதும் இதே பீரிஸ்தான்.

எனவே, சட்டத்துறை மேதையான அவருக்கு சிறிலங்கா அரசியல் யாப்பின் பலமும், பலவீனமும் நன்றாகத் தெரியும்.

தீர்க்கமுடியாத தன்மைகளைப் புரிந்துகொண்டே தீர்வுக்கான வழிமுறைகளைக் கூறிவரும் பீரிஸுக்கு சமாதானத்திற்கும் எட்டாப் பொருத்தம் என்றே கூறவேண்டும்.

சந்திரிகா - ரணில் ஆகிய இருவரதும் ஆழ்மனக்கிடக்கையை நன்றாகப் புரிந்துகொண்டு, அரசியற்தீர்வு குறித்த தனது அபிப்பிராயங்களை வெளிப்படையாக - அது சாத்தியமா, சாத்தியமில்லையா என்ற சிந்தனை நோக்கு எதுவுமின்றி மாற்றி மாற்றி வெளியிடுவதனால், பீரிஸ் அவர்களின் கருத்தை பெரும்பாலானோர் அக்கறையாகக் கவனிப்பதுமில்லை.

ஆனாலும், அவர்தான் பேச்சுவார்த்தைக்கான அரசின் பிரதான பிரதிநிதி.

எப்படி ஒரு காலத்தில் அவர் சந்திரிகாவை - அவரின் அதிகாரப் பரவலாக்கல் யோசனையை ஆதரித்து ஓயாது பிரசாரம் மேற்கொண்டாரோ, அவ்வாறே இப்போது ரணிலின் சமாதான நகர்வுகளை ஆதரித்து ஓயாது இயங்கி வருகிறார்.

கடந்த தேர்தலில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிராகக் கடும் பிரசாரங்களை மேற்கொண்ட பீரிஸ், இந்த ஆட்சிமுறை சர்வாதிகாரத் தன்மை கொண்டதென்றும், அது நீக்கப்படவேண்டும் என்றும் மேடை தோறும் முழங்கினார்.

இப்போது - அதாவது மிக அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில், அவர் வேறுவிதமான கருத்தொன்றை முன்வைத்திருக்கிறார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை, சமஷ்டி ஆட்சிமுறையை அறிமுகம் செய்வதற்கு தடையாக அமையாதென்றும் அவர் கூறியுள்ளார்.

சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறைதான், இன்றைய சமாதான முயற்சிகளுக்கான பெருந்தடை என்பதை அனைவரும் அறிவர்.

ஒரு சாதாரண - ஆனால், சமாதான முன்னெடுப்புகளுக்கு மிக அவசியமான - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பையே எதிர்க்கும் ஜனாதிபதி, வடக்கு - கிழக்கு இணைப்பைப் பிரிக்க யோசனை செய்துவரும் நிலையிலும், மிக மோசமான இனவாத சிந்தனை கொண்ட ஜனாதிபதி தனது அளவற்ற நிறைவேற்று அதிகார பலத்தை வைத்து அரசின் சமாதான முன்னெடுப்புகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பவராக உள்ள நிலையில் - இன்னும் கூறுவதானால், இந்த ஆட்சியைக் கலைக்கக் காலம் பார்த்துக் காத்திருக்கும் ஜனாதிபதி, சமஷ்டி ஆட்சிமுறைக்கு தடையாக இருக்கமாட்டார் எனப் பீரிஸ் சொல்வது யாரை நம்பவைக்க? யாரைத் திருப்திப்படுத்த...?

பீரிஸ் அவர்கள் மேலும் கூறுகையில் - நாட்டைப் பிராந்தியங்களாப் பிரித்து பகிர்ந்தளிக்க அரசு திட்டமிட்டுவரும் வேளையில், ஆள்புல ஒருமைப்பாட்டைக் கட்டிக்காப்பதற்கு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை அவசியம் என்றும் தெரிவித்துள்ளமையானது, அவரது தொலைநோக்கு சிந்தனையின் குறைபாட்டையே காட்டுகிறது.

இதற்கு மேலும், அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு வழிகள் கூறக் கடமைப்பட்டவராகவும், நீதிமன்றத்துக்கு கட்டுப்பட்டவராகவும் இருக்கும் வகையில் இந்த முறையை மாற்றவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

யாரால், இதனை எப்படி மாற்ற முடியும் என்பதை அவரால் கூறமுடியவில்லை.

முதலில் அதனை மாற்றுவது சாத்தியமானதா என்பது குறித்து பீரிஸ் அவர்கள் சிந்திப்பது அவசியமாகும்.

அதனைவிட்டு ஜேர்மன் சமஷ்டி, சுவிஸ் சமஷ்டி என ஆராய்வதில் அர்த்தம் என்ன உள்ளதாம்?


சமாதான ஓய்வு காலத்தில் சமஷ்டி குறித்து ஆராய்வதற்காகவும், விரைவில் அதற்கான ஒரு வரைபைத் தயாரிக்கமுடியும் எனவும் கூட பீரிஸ் கூறினாலும்...

புத்தகத்தத்துவங்கள் நடைமுறைக்கு சாத்தியமா என்பதை பீரிஸ் யோசிப்பது நல்லது.

பலமான ஜனாதிபதியும், பலவீனமான பிரதமரும் ஆளும் சிறிலங்காவின் இரட்டை ஆட்சிமுறை சமாதானத்தை சாத்தியமாக்கும் சமக்ஞைகள் எதனையும் இதுவரை உணர்த்தவில்லை என்பதே உண்மை.

பீரிஸுக்கு இது தெரியாதா என்ன?

## நாடும் நடப்பும்




# கலைவடிவங்கள் பரவலாக்கப்படும்போது அவற்றின் தன்மைகள் மாறுபடக் கூடாது!

## நாட்டுக்கூத்து கலைஞர் உதயன் தெரிவிப்பு

கலை வடிவங்கள் பரவலாக்கப்படும்போது, அவற்றின் அடிப்படைத் தன்மையையும், காத்திரத்தையும் இழந்துவிடக் கூடாது. அவ்வாறு கலை, தன்னுடைய அடிப்படையை இழக்காமல், புதியதொரு வடிவில் பரிணமிக்கும்போது, அது மகிழ்விற்குரிய விடயமே என்று தெரிவித்தார் மன்னார் பேசாலையைச் சேர்ந்த நாட்டுக்கூத்து ஆசிரியர் ஏ.உதயன்.

திருமறைக்கலாமன்ற ஏற்பாட்டில்- நேற்றுக்காலை யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்ற ஈழத்துக்கூத்து விழாவில் - மன்னார் மாவட்ட கூத்துக்கலை பற்றி உரையாற்றியபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

திருமறைக்கலாமன்ற இணை இயக்குநர் சாம்.பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் - தொடக்கவுரையை அருட்திரு.மரியசேவியர் அடிகள் நிகழ்த்தினார். உதயன் தொடர்ந்து கருத்து வழங்குகையில் -

காலத்திற்கேற்றவாறு கூத்து இலக்கியங்கள்- தமது மரபை இழந்துவிடாமல், சிறு மாற்றங்களைச் செய்யவேண்டும். இது அவசியமானது. அன்றைய காலங்களிலே கூத்துக்கலையானவை பரம்பரை வழிப்பட்டவையாகவே இருந்தது. இன்று அந்தநிலை மாறிவிட்டது. எல்லோரும் கூத்துக்கலையைக் கற்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

பண்டைய எமது கலாசார வாழ்விலே, கூத்து இலக்கியம் முதன்மை இடம் வகித்தது. அது சமூகத்திலே பல்வேறு நல்ல பழக்கங்களைத் தோற்றுவித்தது. விருந்தோம்பல் பண்பு - குடி, போதை போன்றவற்றின் பாவனையின்மை என்பவற்றை உருவாக்கியது.

கூத்துக்களிலே புனிதர்கள் வேடங்களை ஏற்பவர்கள்- அரங்க ஆற்றுகை தொடங்கி, அரங்கேற்றம் முடியும்வரையும்



எதுவித தீயபழக்கங்களிலும் ஈடுபடாமல் இருப்பதாகச் சத்திய பிரமாணம் எடுப்பார்கள். இதனை சிலர் தமது வாழ்விலே தொடர்ந்து கடைப்பிடிப்பதும் உண்டு.

கூத்து இலக்கியங்களிலே கௌரவமான பாத்திரங்களை ஏற்றவர்கள் - சமூகத்திலும் அந்த இடத்தில் வைத்தே நோக்கப்பட்டார்கள். பண்டைய சமூகம் - எமது கூத்து இலக்கியத்தை மட்டுமல்லாது, பல்வேறு படைப்பு இலக்கியங்களையும் ஊக்கப்படுத்தி வளர்த்தது. அது இன்று எம்மிடம் உள்ளது. இதை நாம் தக்கமுறையிலே, எமது எதிர்காலச் சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

முன்னதாக ஆரம்ப உரைநிகழ்த்திய மரியசேவியர் அடிகள் தனதுரையில் - எமது கூத்துக்கலையைக் காப்பாற்ற - சமூகம், குறிப்பாக மாணவ சமுதாயம் முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்விலே - பல பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஈழத்துக்கூத்து விழா தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. காலை அமர்வுகளில் கருத்தரங்குகளும், இரவு அமர்வுகளில் கூத்து இலக்கிய படைப்புக்களும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# சமஷ்டி அமைப்பு முறையினை புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்

## என்கிறார் ஜீ.எல்.பீரிஸ்

சமஷ்டி அமைப்பை - விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதையே தற்போதையநிலை விளக்கியுள்ளதாக, அரசியல் விவகார அமைச்சரும், நடாளுமன்ற அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் கூட்டம், நேற்று இடம்பெற்றது. அக்கூட்டத்தில் உரையாற்றும்போது, பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

சுவிஸில் தற்போது நடைபெறும் கூட்டம் ஒன்றில் அரசில் அங்கம்வகிக்கும் பேர்ணாட் குணதிலகவிற்கும், விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த புலித்தேவனுக்கும் இடையே பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது.

இந்தப்பேச்சுவார்த்தையானது, சமாதானபேச்சுவார்த்தை தொடர்பானது அல்ல என்றும், சமஷ்டி தொடர்பாக எடுக்கும் ஒரு முன்படிப்பு எனவும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர், குரங்குப்பாஞ்சான் முகாம் அமைத்ததைத் தவிர, அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் எதிலும் விடுதலைப் புலிகள் முகாம் அமைக்கவில்லை என்பதில், அரசு தெளிவாக இருப்பதாகவும், அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் - அரசு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் முகாம்களை அமைக்கிறார்கள் என்று எதிர்க்கட்சிகள் பரப்பிவரும் குற்றச்சாட்டுக்களில், உண்மை இருப்பதாகத் தமது அரசு கருதவில்லை எனவும், மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இன்னமும் இரண்டு வாரங்களில் நோர்வேயூடாக இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்ட வரைபை முன்வைக்க உள்ளதாகவும், அந்த திட்டவரைபு நோர்வேயிடம் முதலில் கையளிக்கப்பட இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நோர்வேயிடம் கையளிக்கப்படவுள்ள விடுதலைப் புலிகளின் குறிப்பிட்ட வரைபினை அரசிடம், நோர்வே கையளிக்கும் என்றும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

# குற்றச்செயல்களைத் தடுக்க தகவல் மையங்கள் அமைப்பு

நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸ் தகவல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் கொலைகள், வங்கி, வாகனக் கொள்ளைகளை நடாத்திவிட்டு, தப்பியோடும் குற்றவாளிகளை இலகுவாகப் பிடிக்கமுடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடுமுழுவதும் இவ்வாறான ஒரு பொலிஸ் தகவல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இவை அனைத்தும் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மையங்களுக்குப் பொதுமக்கள் தொலைபேசி மூலமாகச் செய்திகளை அனுப்பமுடியும் எனவும், தமது பெயர்களைக் குறிப்பிடத் தேவையில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்ட தகவல் நிலையத்தின் தொலைபேசி - 021- 222 - 6705 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்த வார பலன்கள்

## 12.09.2003 ~18.09.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| சந் | ராகு | | சனி |
| செவ் யுரோ | 13 இ.8.44 மே.சந் <br> 16 கா 9.07 இட . சந் <br> 18 இ. 9.57 மிது . சந் | | |
| நெப் | | | குரு புதன் |
| | | கேது | சூ சுக் |

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு இந்தவார முற்பகுதியில் தேகசுகக் குறைவும், மன நிம்மதியின்மையும் காணப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். செய்தொழிலில் மனச்சோர்வு காணப்படும். வாரப்பிற்பகுதி பொதுவாக நன்று. திருமணத்தை எதிர்நோக்கு வோருக்குக் கருமம் தாமதமடையும். தூரதேசப் பிரயாண முயற்சிகள் தடைப்படும். உத்தியோகத்தர்கள் நினைத்தவாறு கருமமாற்ற முடி யாத நிலையிருக்கும். வியாபாரிகளுக்குப் பண நிலை சிறப்பாக இராது. மாணவர்களுக்கு உற்சாகம் குறைவாகவே இருக்கும். ஊக்கம் தேவை.

### இடபம்

(கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)



இவர்கள் செய்தொழிலில் உற்சாகமாக இருப்பார்கள். எனினும், முயற்சிக்கேற்ப இலாபம் கிடைப்பது கடினம். தேகசுகம், குடும்பசுகம் நன்றாக இருக்கும். பிள்ளைகளதும், குடும்பத்தினரதும் ஒத்துழைப்புக் கிடைக்கும். செலவு சற்று அதிகமாகக் காணப்படும். பிரயாண வாய்ப்புக்கள் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்குச் சக உதவிகளும், சந்தோஷமும் இருக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் இடம்பெறலாம். வியாபாரிகளுக்கு வியாபாரம் தங்குதடையின்றி நடைபெறும். வங்கி நிலை நன்று. மாணவர்கள் முன்மாதிரி காட்டி, ஆசிரியரை மகிழவிப்பர்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )



இந்த இராசியில் பிறந்தவர்களுக்குச் செய்தொழிலில் போட்டி, பொறாமைகள் இருக்கும். மனச்சோர்வு ஏற்பட இடமுண்டு. உடல் நலக் குறைவுகளால் மருத்துவரை நாடவேண்டியிருக்கும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் தோன்றும். காதலில் ஈடுபட்டோர் ஏமாற்றமடைவர். பிள்ளைகளாலும், நண்பர்களாலும் நற்பலன்கள் கிட்டும். உத்தியோகத் துறையிலுள்ளோர் கருமம் செய்யமுடியாமல் மனச்சோர்வடைவர். மறைமுக எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். வியாபாரிகள் பழைய முதலீடுகளை விற்பதில் சோர்வடைவர். மாணவர்கள் விருப்பமற்றுக் கல்வியில் ஈடுபடுவர்.

### கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)



செய்தொழில்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். அடிக்கடி மனச்சஞ்சலமடைவதால், நோய் வாய்ப்பட இடமுண்டு. இதனால், பணச்செலவுகள் அதிகமாகும். குடும்பத்தில் மனவேறுபாடுகள் தோன்றலாம். உறவினர், நண்பர்களின் உதவி கிடையாது. திருமணப் பாக்கியம் வேண்டுவோர் காத்திருக்க வேண்டியிருக்கும். பிரயாணங்களின்போது அலைச்சலும், நட்டங்களும் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும். வியாபாரிகளுக்கு விற்பனை ஒருவாறு நடைபெற்றாலும், பணம் சேராது. மாணவர்களுக்குக் கல்வியில் சோர்வு காட்டும்.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம)



இந்த ராசியில் பிறந்தவர்களுக்குச் செய்தொழில் விருத்திபெறும். தொடங்கும் கருமங்கள் எளிதில் நிறைவுபெறும். மனதில் உற்சாகமும், குதூகலமும் காணப்படும். முன்பிருந்த தேகசுகக் குறைகள் நீங்கும். குடும்பசுகம் நன்றாக இருக்கும். இனசனபந்துக்களின் வருகை அதிகமாகும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நிகழ இடமுண்டு. உத்தியோகத்தர்கள் உற்சாகமாக தொழில் செய்யக்கூடிய வாய்ப்புக் கிட்டும். மங்கள கருமத்தை எதிர்நோக்குவோர், கருமம் கைகூடப் பெறுவர். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நல்ல விலைபோகும். மாணவர்கள் கல்வியில் அதிக நாட்டம் செலுத்துவர்.

### கன்னி


(உத்தரம் 2, 3 4 ஆம் பாதங்கள, அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)



இவர்கள் செய்தொழிலில் லாபம் காண்பர். மனநிம்மதியும், மகிழ்ச்சியும் காணப்படும். தேக ஆரோக்கியம் நன்றாக அமையும். குடும்பத்தில் நல்லுறவும், புத்திரர்களால் மகிழ்ச்சியும் உண்டு. வெளியூரிலிருந்து மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும். விருந்தினர் வருகை கூடுதலாக இருக்கும். திருமண ஏற்பாடுகள் மும்மரமாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்குச் சந்தோஷமாகத் தொழிலாற்றக்கூடிய தன்மைகள் இருககும். வியாபாரிகளுக்கு முதலீடுகளால் அதிகம் லாபம் கிடைக்கும். மாணவர்கள் உற்சாகமுடையவர்களாகக் காணப்படுவர்.

### துலாம்

(சித்திரை 3 , 4 ஆம் பாதங்கள, சுவாதி விசாகம் 1,2, 3 ஆம் பாதங்கள்)



துலா ராசியினருக்கு இந்த வாரம் பிரயாசை அதிகமாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் அனுகூலமாவதில் தாமதம் காணப்படும். தேகசுகத்தை அவதானமாகப் பேணவும். குடும்பத்தில் கருத்துவேற்றுமைகள் தோன்ற இடமுண்டு. பிரயாண வாய்ப்புக்கள் ஏற்படும். திருமண முயற்சிகள் நினைத்தவாறு அனுகூலமாகும். தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். உத்தியோகத்தை எதிர்நோக்குவோருக்கு தாமதத்தின் மேல் கருமம் கைகூடும். வியாபாரிகளுக்குத் தொழில் நன்றாக நடக்கும். புதிய முதலீடுகளால் லாபமுண்டு. மாணவர்களுக்கு ஊக்கம் தேவை.

### விருச்சிகம்

(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)



இவர்களுக்கு தொழில் முயற்சிகள் நன்றாக இருப்பினும், இடையிடையே மனச்சஞ்சலம் காணப்படும். வரவிலும் பார்க்கச் செலவு அதிகமாகும். மறைமுக எதிரிகளைப் பற்றி அவதானமாக இருக்கவும். பிரயாணத்தை மேற்கொள்வோர் உடல்நலத்தைப் பேணவும். குடும்பத்தில் கட்டுக்கோப்புக் குலைவதால், குழப்பங்கள் காணப்படும். திருமணத்தை எதிர்நோக்குவோர் கால தாமதத்தையே காண்பர். வியாபரிகளுக்குக் குறைந்த வருமானங்களே கிட்டும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்கள் கல்வியிலும் பார்க்க, விளையாட்டுத்துறையில் கூடுதலாக ஈடுபடுவர்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)



இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு மனச்சந்தோஷமும், தொழில் முயற்சியில் லாபமும் கிட்டும். தேகசுகம் பாதிப்படைய இடமில்லை. கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. கொடுத்த பொருட்கள் திரும்பி வருவது கஷ்டம். குடும்பத்தில் ஒற்றுமையும், புரிந்துணர்வும் ஏற்படும். பிள்ளைகளால் உதவியுண்டு. உறவினர்கள் தூரதேசத்திலிருந்து வருகைதருவார்கள். செலவுகள் கூடுதலாக இருப்பினும், அவற்றை ஒருவாறு சமாளிப்பீர்கள். திருமண எதிர்பார்ப்புக்கள் அனுகூலமாகி மனச்சந்தோஷமும், சிறப்பும் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வருவாயிலும் பார்க்க, அதிக செலவுகள் ஏற்படும். தொழிலில் நிம்மதி குறைவாகவே இருக்கும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நல்ல விலை போகும். வங்கிநிலையும் நன்று. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.

### மகரம்


(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)



மகர ராசியினர் செய்தொழிலில் உறுதியும், உயர்வும் பெறுவர். எனினும், செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும். உடலின் சுறுசுறுப்பும், ஆரோக்கியமும் குறையும். வியாழ சுகமின்மையால், மருத்துவரின் உதவி தேவைப்படும். கடன் தொல்லைகளும் நிம்மதியைக் குலைக்கும். குடும்பத்தில் மனக்கசப்புக்கள் தோன்றும். திருமண எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தையே தரும். வியாபரிகளுக்கு முதலீட்டுக்கேற்ப வருமானம் கிடையாது போகலாம். வார இறுதி சற்று முன்னேற்றம் தரும். உத்தியோகத்தர்களுக்கு திடீர் இடமாற்றங்கள் ஏற்படலாம். சக உதவிகள் கிடையாது. மாணவர்கள் கல்வி முன்னேற்றத்தையும், பாராட்டுக்களையும் பெறுவர்.

### கும்பம

(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)



இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் முன்னேற்றம் குன்றினாலும், தமது சாமர்த்தியத்தால் சமாளிக்கமுடியும். எனினும், செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். குடும்பத்திலும் சில கருத்து முரண்பாடுகள் தோன்றலாம். பிரயாண வாய்ப்புக்கள் கிட்டும். திருமண வாய்ப்புகளும், மனச்சந்தோஷமும் ஏற்படும். வீட்டில் சுபகருமங்கள் நிகழ இடமுண்டு. அயலவர்களின் உதவிகள் உண்டு. தூரதேசத்திலிருந்து நற்செய்திகள் வரும். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சியுடன் தமது தொழிலில் ஈடுபடுவர். வியாபாரிகளுக்குத் தேங்கிக்கிடந்த முதலீடுகள் விற்பனையாகும். மாணவர்கள் வீண் பொழுதுபோக்குகளைக் கட்டுப்படுத்தல் நன்று.

### மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம் உத்தராட்டாதி, ரேவதி)



மீன ராசிக்காரர் இந்த வாரம் சுறுசுறுப்புடையவர்களாகக் காணப்படுவர். தொழிலில் லாபமும், மேன்மையும் பெற்றிடுவர். தொடங்கிய கருமங்கள் நன்மையில் முடியும். உடல் நலமும், ஆரோக்கியமும் மனத்தென்பைக் கொடுக்கும். வீட்டில் சுபகருமங்களுக்காக, புதிய பொருட்கள் வாங்குவதில ஈடுபடுவர். திருமண வாய்ப்புக்களில் சற்றுத் தாமதம் காணப்படும். உத்தியோகத்தர்கள் தமது முயற்சியால் எல்லாவற்றையும் சமாளித்து விடுவர். வியாபாரிகளுக்கு நினைத்தவாறு அதிகலாபம் கிடையாது. தொழில் சம்பந்தமான பிரயாணம் ஏற்படலாம். மாணவர்கள் முன்னேற்றமடைய வாய்ப்புக்கள் கிட்டும்.

---

# இறைவன் எங்கும்

இறைவன் என்ற சொல் 'இறு' என்ற பகுதியடியாகப் பிறந்தது. எல்லா உயிர்களிலும், எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்து நிற்கின்றான். இனி எல்லாம் அவனிடத்தில் இருக்க, அவன் அவைகளுக்கெல்லாம் உறைவிடமாக இருக்கிறான். இது இறைவனுடைய விஸ்வரூபம்.

எல்லாப் பொருள்களிலும் தங்கவேண்டுமானால் சிறிய - மிகச்சிறிய பொருளாக இருக்கின்றான். மேருகிரி முதலிய பொருள்கள் யாவும் அவனிடத்திலே தங்கும்படி, அப்பெருமான் மிகப்பெரிய பொருளாக விளங்குகின்றான். இதனை உபநிடதம் 'அணோரணீயாந் மஹதோமஹீயா நாத்மா' என்று கூறுகின்றது.

அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு மகத்தாகவும் விளங்குபவன் இறைவன். ஒரு பழங்கதை 'பழம் கதை'.

திருக்கைலாய மலையில் உமாதேவியாருடன் சிவபெருமான் வீற்றிருக்கின்றான். விநாயகப்பெருமானும், முருகப்பெருமானும் தாய், தந்தையரை வணங்கி வழிபடும் பொருட்டுச் சென்றார்கள். தினந்தோறும் பழங்காலத்தில் மைந்தர்கள்- தந்தை, தாயரை வழிபடுகின்ற வழக்கம் இருந்தது.

**"வைகறை யாமம் துயில் எழுந்து**<br>
**தான் செய்யும்**<br>
**நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து**<br>
**வாய்வதில்**<br>
**தந்தையும் தாயும் தொழுது எழுக**<br>
**என்பதே**<br>
**முந்தையோர் கண்டமுறை"**

என்று ஆசாரக்கோவை கூறுகின்றது.

முருகப்பெருமான் மயிலின் மீது ஏறி அகில உலகங்களையும் ஒரு நொடிப்பொழுதுக்குள் வலம் வந்தார். 'எல்லாம் சிவத்துக்குள் ஒடுக்கம்' என்று கூறியதை மதியால் சிந்தித்து, ஆனைமுக அண்ணல் - அம்மையப்பரை வலமாக வந்து கனிபெற்றார்.

இந்தப் பழங்கதை ஒரு பெரிய தத்துவத்தை உணர்த்துகின்றது.

தந்தைக்கு உபதேசித்த தயாபரனுக்குச் சிவத்துக்குள் எல்லாம் ஒடுக்கம் என்பது தெரியாதா? தெரியும்.

எல்லா உலகங்களையும் சர்வ வல்லமை

# நீக்கமற நிறைந்திருக்கின்றான்

யுடைய வல்லமை விநாயகரால் வலம்வர இயலாதா இயலும்.

சிவபெருமான் - இரு மைந்தர்களும் "கனி கேட்டபோது, உள்ள கனியை! உடைத்துப் பகிர்ந்து தரக்கூடாதா?

அல்லது ஒரு புதிய கனியை உண்டாக்கித் தரக்கூடாதா? வீதியில் விளையாடுகின்றவன்கூட ஏதேதோ பொருளைத் தருவிக்கின்றானே 'தம்பிக்கே தந்து விடுங்கள். எனக்கு வேண்டாம்' என்று விட்டுக் கொடுக்கின்ற குணம் விநாயகரிடம் இல்லையா? "அப்பா! அண்ணாவுக்கே கொடுங்கள். நான் பிறகு வாங்கிக் கொள்ளுவேன்" என்று ஒதுங்கிப்போகின்ற தியாக புத்தி. வேலவன் பால் இல்லையா?

ஒரு சிறிய கனி காரணமாக உலகத்தை வலம் வந்தால் கூலி கட்டுமா?

பழம் காரணமாக - திருக்கைலாய மலையில் முருகனும், விநாயகரும் போட்டியிடலாமா? பழத்தின் மீது ஞானமே வடிவான விநாயகருக்கும், ஞானபண்டிதனுக்கும் அத்தனை ஆசையா? என்ற வினாக்கள் அடுக்கடுக்காக எழுகின்றன.

இத்தனை வினாக்களுக்கும் உரிய விடையைக் காணுகின்றபோது-

இறைவனைப்பற்றி நாம் முன் என்ன சிந்தித்தோம் "எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் அவன் தங்கியிருக்கிறான்.' அவனிடம் எல்லாம் தங்கியிருக்கின்றன எனறு இருவிதமாக நினைத்தோம் அல்லவா?

இவற்றுள் எல்லாவற்றையும் பார்த்தார் கணபதி. எல்லாவற்றுக்குள்ளும் சிவத்தைப் பார்த்தார் முருகன்.



இந்தப் பெரிய அரிய உண்மையை உணர்த்துகின்றது அப்பழங்கதை.

இறைவன் எங்கும் நீக்கமற்று நிறைந்திருக்கிறானோ? உலக மாயை அவனைப் பற்றாதோ? என்ற வினா எழும்.

உப்பு விளைகின்ற இடம் கடல். கடலில் உவர்நீரில் பிறந்து, உவர்நீரைப் பருகி, உவர்நீரில் வாழ்கின்ற மீனுக்கு உவர் ஏறுவதில்லை. மீன் உண்போர் கடல் மீனுக்கும் உப்பிட்டுத் தான் சமைத்து உண்பார்கள். அதுபோல, இறைவன் யாண்டும் உறைகினும் உலக மாயை அவனைப் பற்றாதென உணர்க.

எங்கும் நிறைந்த பொருள் இறைவன் என்றால், ஏன் அது நமது கண்ணுக்குத் தெரியவில்லை? என்பாரும் உளர். விறகிலே நெருப்பு இருக்கின்றது, பாலிலே நெய் இருக்கின்றது. ஆனால் கண்ணுக்குத் தெரிகின்றனவா? இல்லை. விறகிலே தீயும், பாலில் நெய்யும் கண்ணுக்குத் தெரியாமையால் - அது இல்லையென்றால், நமக்கு அறிவு இல்லையென்று உலகம் சிரிக்காதா?

விறகை எரித்தால் தீ வெளிப்படும், பாலைக் கடைந்தால் நெய் வெளிப்படும். அதுபோல, தியானம் புரிந்தால் இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தருவான். சாதனைகள் செய்தால் தேவரும், மூவரும் காணமாட்டாத சிவம், தானே வந்து வெளிப்பட்டுத் தோன்றும்.

கவிமாமணி.
காரை. எம்.பி அருளானந்தன்

# வீடன் வெளியுறவு அமைச்சர் அனா லிண்டா னந்தெரியாத நபரினால் குத்திக் கொலை!

## தலைநகர் ஸ்ரொர்ஹோமில் சம்பவம்



சுவீடன் வெளிவிவகார அமைச்சர் அனா லிண்டா - நேற்றுமுன்தினம் சுவீடன் தலைநகரில் பல்பொருள் அங்காடி ஒன்றில் பொருட்கள் கொள்ளவனவு செய்யச் சென்ற வேளை, இனந்தெரியாத நபரால் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டார்.

இவர் கை, நெஞ்சு, வயிறு போன்ற பகுதிகளில் பலத்த குத்துக் காயங்களுக்குள்ளானார். இவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு - வைத்திய நிபுணர்கள் தீவிர முயற்சி செய்தபோதும், அது கைகூடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுவீடன், இதுவரை ஈரோவில் இணையவில்லை. சுவீடனை ஈரோவில் இணைப்பதற்காக, அனா லிண்டா தீவிர முயற்சி எடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சுவீடன் ஈரோவில் இணைவது குறித்து ஆராய்வதற்கான மாநாடு - வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்தவேளையிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஸ்கன்டிநேவிய நாடுகளான நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகளில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் எதுவும் இல்லாத காரணத்தினால் - இந்த நாடுகளின் அமைச்சர்கள், மற்றும் அரச உயர் தலைவர்கள் மெய்பாதுகாவலர்களின்றி, சாதாரண மக்களைப் போலவே வெளியில் சென்றுவருவார்கள்.

சுவீடன் நாட்டின் அமைச்சர்கள் எவரும் தமது பாதுகாப்பிற்காக மெய்ப்பாதுகாவலர்களை வைத்திருப்பது நடைமுறையில் இல்லை. அனா லிண்டாவும் மெய்ப்பாதுகாவலின்றி - பல்பொருள் அங்காடிக்கு பொருட்கள் கொள்வனவு செய்யச் சென்றபோதே, மேற்படி துயரச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

1986 ஆம் ஆண்டு - சுவீடன் நாட்டின் முன்னாள் பிரதம மந்திரி ஒலோவ் பாம் தனது மனைவி மற்றும் மகனுடன் திரைஅரங்கு ஒன்றிலிருந்து வெளியே வந்தபோது இனந்தெரியாத நபரினால் சுட்டுக் கொல்லப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கப் படைகளுக்கு ஈராக்கிலேயே புதைகுழி!

### ஈராக்கியரிடம் ஒஸாமா பின்லேடன் வேண்டுகோள்



ஈராக்கில் உள்ள அமெரிக்க படையினருக்கு - ஈராக்கிலேயே புதைகுழியைத் தோண்டும் நிலையை ஏற்படுத்துவதற்கு - ஈராக்கிய சகோதரர்கள் போராடவேண்டும் என்று, ஒஸாமா பின்லேடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அராபியத் தொலைக்காட்சியான அல்ஜசீராவுக்கு அனுப்பிவைத்த ஒளிநாடாவில் தோன்றிய, அல்கொய்டா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின் இரண்டாவது ஆண்டு நிறைவை ஒட்டி வெளியிடப்பட்ட ஒளிநாடாவிலேயே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

உலக நோக்கு

# யஸீர் அரபாத்தை பதவி விலக்க வேண்டும்; இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு!

அமெரிக்காவின் ஆட்சேபனைகளைப் புறக்கணித்து, பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தை பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று, இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலில் அண்மையில் நடத்தப்பட்ட இரண்டு தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து, கடந்த வியாழக்கிழமை கூட்டப்பட்ட முக்கிய மாநாட்டிலேயே, அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

யசீர் அரபாத்தை பதவி விலக்குவது தொடர்பாக, தற்போது அமெரிக்காவிடம் கோரிக்கைவிடுத்தால், அமெரிக்கா சிலவேளை அதனை நிராகரிக்கக்கூடும்.

சில சந்தர்ப்பங்களில் வெளியார் தலையீடுகள் இன்றி சில தீர்மானங்களை எடுக்கவேண்டிய நிலையும் ஏற்படலாம் எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இஸ்ரேலில் நடந்த இரண்டு தற்கொலைத் தாக்குதல்களிலும் 15 பேர்வரை கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட சமயத்தில் - இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் இந்தியாவிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். தற்கொலைத் தாக்குதல்களைத் தொடர்ந்து, தனது இந்திய விஜயத்தை இடைநிறுத்தி ஷரோன் உடனடியாக நாடு திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மையில் பதவி விலகிய பலஸ்தீன பிரதமர் முஹமட் அபாஸ் இடத்திற்கு, புதிய பிரதமராக பதவியேற்குமாறு அரபாத் விடுத்த கோரிக்கையை, தற்போதைய நாடாளுமன்ற சபாநாயகரான அஹமட் கூரி ஏற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், அஹமட் - பலஸ்தீன விடுதலை திட்ட உருவாக்கல் அமைப்பின் சம்மதத்தை பெற்றுக் கொள்வதற்காக, நேற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.


# மாநகரசபை -யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

மாநகரசபையால் நீர் வழங்கல் செய்வதற்கான கீழ்காணும் புதிய நீர் உந்தி இயந்திரங்கள் 2, அதன் இணைப் பொருட்களுடன் தேவை. இதனை விநியோகம் செய்யும் தாபனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றது. இக்கேள்விகள் யாவும் 22. 09.2003 ஆம் திகதிக்குள் கீழ்க்காணும் விபரங்கள் அடங்கியதாக படிவம் தங்களால் தயாரிக்கப்பட்டு கடித உறையின் இடதுபக்கம் "பிஓ/01/2003 நீர் உந்திகள்" என எழுதப்பட்டு ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (வழங்கல் அங்கீகாரம் கிடைத்து 10 நாட்களில் மாநகரசபைக் களஞ்சியத்தில் பரிசீலிக்கப்பட்டு கையளித்தல் வேண்டும்).

**submersible Pump supply for Jaffna Municipal Council Pump Station**

Submersible water pump with motor with submersible cable with kit and necessary all fittings.

| | | |
|---|---|---|
| Make | - | Specify Make |
| Brand | - | Specify |
| Capacity | - | 70 M3/hr |
| Total head | - | 60 M |
| Speed | - | 2830 RPM |
| No.of Stages | - | 4 |
| Maximum dia | - | 187MM |
| Motor rating | - | 22.4KW |
| Voltage | - | 400 V, 3Ph, 50Hz |
| Discharge dia | - | 4`` |

Rate include installation and commissioning, state clearly guarantee period and spares needed for 2 years operation.

E.RAMALINGAM
Commissiner,
Municipal Council,
Jaffna.

12.09.2003 (சி-1487)


# ஊர்சுற்றி எழுதுவது



பங்குனி மாதத்து வெய்யில்தான் மக்களைப் பதைபதைக்கச் செய்யும் என்று சொல்லுவார்கள். ஆவணி மாதத்து வெய்யிலுக்கும் அந்தச் சக்தி இருக்கின்றது என்பதை யாழ்ப்பாணத்து மக்கள் இப்போது அனுபவித்துத் தெரிந்து கொள்கிறார்கள்.

மாரிகாலம் யாழ்ப்பாணத்தை எட்டிப் பார்த்துக்கொண்டு நிற்கிறது. மழை பொழிந்தால் யாழ். நகரில் இம்முறை வெள்ளம் மட்டுமல்ல வெள்ளத்தோடு குப்பைகள், பொலித்தீன் பைகள் ஆகியவற்றோடு தொற்றுநோய்களும் வீட்டுக்கதவைத் தட்டாமலே உரிமையுடன் வந்து உறவாடுவதற்கு தயாராக நிற்கின்றன என்று நண்பர் சொல்கிறார்.

யாழ். நகரில் பல இடங்களில் கழிவுநீர் செல்லும் கால்வாய்கள் குப்பை கூழங்களினால் நிறைந்து, கழிவுநீர் ஓடமுடியாதபடி அடைத்துக் கிடக்கின்றன. போதாக்குறைக்கு செடி கொடிகளும் இந்தக் கால்வாய்களில் வளர்ந்து கழிவுநீரோ, மழைநீரோ வழிந்து செல்ல முடியாதபடி தடையாக இருக்கின்றன. மழை பொழிந்தால் இல்லை மழை விழுந்தால்கூட இக்கால்வாய்களினூடாக நீர் செல்ல முடியாது. கால்வாய்களை மேவி வீதிகளிலும், அயலிலுள்ள வீடுகள், வளவுகளுக்குந்தான் குப்பை கூழங்களுடன் அசுத்தநீர் புகமுடியும். இவற்றுடன் கூடவே தொற்றுநோய்க் கிருமிகளுக்கும் அழைப்பில்லாமலே வீடுகளுக்குள் விருந்தாளிகளாக இடம்பிடிப்பர்.

இருப்பதற்குச் சொந்தமாக நிலம் அற்ற சிலர் சில வருடங்களுக்கு முன்னரும், போர்க்காலத்திலும் (போர்க்காலத்தில் இடம்பெயர்ந்தவர்களின் வீடுகளில் குடியேறியவர்கள் போக) குப்பைகள் கொட்டி மேடாகி வறண்டுபோயிருந்த குளக்கரைகளில் கொட்டில்கள் போட்டு தங்கியிருப்பதற்கு இடம்பிடிப்பர். படிப்படியாக இந்தக் கொட்டில்கள் குளக்கரைகளில் அதிகரித்தன. குளங்கள் வற்றிய காலத்தில் இக்கொட்டில்கள் குளங்களின் உள்ளேயும் விரிவடைந்து கல்வீடுகளாகிவிட்டன. குளங்கள் சிறுத்துவிட்டன. சில மக்களின் குடியிருப்புப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தது.

என்னவோ உண்மைதான்! ஆனால், குளங்களில் தேங்கும் மழைநீர் குறைந்துவிடும், மழை காலத்தில் கிடைக்கும் மழை நீரை எத்தனை அதிகமான குளங்கள் தோண்டியாவது சேமித்து வைத்தால்தான் நிலத்தடி நீர் சேரும். தண்ணீர் பஞ்சமும் ஏற்படாது.

இந்தக் குளங்களில் நிரம்பி வழியும் நீர்தான் வாய்க்கால்களில் செல்லவேண்டும். இதுபோன்ற நிலையில் மழைவிழுந்தால் குளங்களில் தண்ணீர் அதிக அளவில் தேங்கி நிற்கவும் வழியில்லை. கால்வாய்களில் செல்வதற்கும் குப்பை கூழங்களும் செடி கொடிகளும் வழிவிடுவதாகக் காணோம்!

மாரிகாலம் வருமுன் மாநகர சபையும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களும் இது விசயத்தில் கவனம் செலுத்த முன்வரமுடியுமா?

❖ ❖ ❖ ❖ ❖

'ஆணாப் பொன்ணாக் காணேனாம் இராமநாதனாம் பேர்' என்று சில இடங்களில் தமிழில் பழமொழி சொல்வார்கள். உதை விளக்கமாகச் சொல்வதற்கு நம்ம ஊர்ப் பழமொழிதான் பொருத்தம்.

அதாவது 'ஆடறுக்க முந்தி எதுக்கோ விலை பேசிய மாதிரி என்று சொன்னாலும் புரியும்'.

இடைக்கால நிர்வாக சபைக்கே சன்னதமாடிநிற்கும் சந்திரிகா அன் கம்பனிகளுக்கு சமஷ்டி ஆட்சிக்கு வந்தாலும் நிறைவேற்று அதிகார முறைக்கு தடையிருக்காது என்று அமைச்சர் பீரிஸ் சொல்லியிருப்பதைத்தான் அந்தப் பழமொழிக்கு ஒப்பிட்டேன்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி என்ற தும்புமிட்டாயைக் காட்டியாவது வழிக்குக் கொண்டுவரலாமென்று, அமைச்சர் பீரிஸ் கருதுகிறாரோ?


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 08 - 09 - 1918



மறைவு 14 - 08 - 2003

## திருமதி சிவசுப்பிரமணியம் கோசலையம்மா

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து பாசத்துடன் வளர்த்தாய்.
பாரினிலே இன்று எம்மை ஆளாக்கி நடமாடவிட்டாய்.
எமை இங்கு தவிக்கவிட்டு நீர் எங்கு சென்றீர் அம்மா.
என்றும் உங்கள் நினைவுடன் எங்கள் உடம்பு ஊசலாடும்.

14.08.20003 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை 13.09.2003 சனிக்கிழமை அதிகாலை எமது இல்லத்திலும், தொடர்ந்து நண்பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ராஜு ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்
சுப்பிரமணியன் சோடா கம்பனி
ஊரிக்காடு - வல்வெட்டித்துறை. (சி-1488)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

தேர்தல் வரப்போகும் செய்திகள் வெளிவந்ததுமே புதிய கூட்டமைப்புக்கள் தொடர்பான செயற்பாடுகளும் வேகமாகியுள்ளது.

ஜே.வி.பி - சி.சு.கட்சி கூட்டணி உடைந்துபோயுள்ள நிலையில், ஒட்டுப்போடும் வேலைகளும் தொடர்கின்றன.

இடையே ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஜே.வி.பியின் விமல் வீரவன்ச குழுவினரைச் சந்தித்து தேசிய கூட்டமைப்பது பற்றி பேசியுள்ளதாகத் தெரிகிறது.

வடக்கு கிழக்கு இணைப்பை, இடைக்கால நிர்வாகத்தை, சமஷ்டி முறையிலான தீர்வை, நோர்வே அனுசரணையுடனான சமாதான நகர்வுகளை முற்றும் முழுதாக பகிரங்கமாகவே எதிர்க்கும் ஜே.வி.பியுடன் - என்றுமே பிரிக்கமுடியாத வடக்கு கிழக்கு இணைப்பு, மாநில சுயாட்சி ஆகியவற்றை வலியுறுத்துவதாகப் பிரசாரம் செய்யும் ஈ.பி.டி.பி எந்த வகையில் கூட்டு ஒருமைப்பாடு காணப்போகிறது என்பதே கேள்வி.

கந்தையா வாத்தியார்... இரண்டு தரப்புமே இந்தியத் தலையீட்டை இப்போது வலியுறுத்துவதால் - அந்தவகையில் ஒன்றுபடக்கூடும்... அதற்கு அழுத்தம் கிடைத்திருக்கக்கூடும் என்கிறார்.

வாத்தியார் ஆழமாய்த்தான் யோசிக்கிறார்!

-தெருவாசி



# இறங்குதுறை புனரமைப்புக்கு 25 இலட்சம் ரூபா ஒதுக்கீடு!

பருத்தித்துறை முனைக்கும் தொண்டைமானாறுக்கும் இடையே காணப்படுகின்ற இறங்குதுறைகளின் புனரமைப்புக்கு 25 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இறங்குதுறைகள் புனரமைப்புப் பணிக்கு 1 கோடி ரூபாவுக்கு மேல் தேவையான நிலையில் 25 இலட்சம் ரூபா ஒதுக்கிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இறங்குதுறைப் புனரமைப்பிற்கு கனரக வாகனங்கள் பாவிப்பதற்கு படையினரின் அனுமதி கிடைக்கவில்லை எனவும், படையினர் கனரக வாகனங்களை பாவிப்பதற்கு அனுமதியளித்தால் வீணான செலவுகள் குறைவடையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இருபது வருடங்களாக இறங்குதுறை புனரமைக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தெற்காசிய ஆசிரிய சம்மேளனத் தலைவராக மகாசிவம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் த.மகாசிவம் தெற்காசியப் பிராந்திய ஆசிரிய தொழிற்சங்கங்களின் சம்மேளன தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் கொழும்பில் நடந்த தெற்காசியப் பிராந்திய ஆசிரிய தொழிற்சங்கங்களின் சம்மேளன மாநாட்டிலேயே அவர் தெரிவு செய்யப்பட்டார். (10)

## போராளி ஜெகன்...

பும் கோரினர்.

காரணமின்றி தான் கைதுசெய்யப்பட்டமை, பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்கமாக கைவிலங்கிடப்பட்டமை, காவல்நிலையம் கொண்டுசெல்லப்பட்டு, புரியாத மொழியில் தயாரிக்கப்பட்ட படிவத்தில் கையொப்பம் பெற முயற்சித்தமை என்ற காரணங்களால் தமது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாகவும் அவர் மனித உரிமை அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று மனித உரிமைகள் அலுவலகதில் விசாரணைகள் நடைபெற்றன.

இந்த விசாரணையின்போதே, சுன்னாகம், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸாரும் மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னிலையில் சம்பவம் தொடர்பாக மன்னிப்புக் கோரியதுடன் இவ்வாறான சம்பவம் இனிமேல் நடைபெறமாட்டாது எனவும் உறுதியளித்தார்.

## வேலைக்கு ஆட்கள் தேவை

ஹோட்டல் ஒன்றில் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள உடன் ஆட்கள் தேவை.

☆ ரீ மேக்கர் ☆ உணவு பரிமாறுபவர்
☆ உதவியாளர்கள் ☆ பில் கிளார்க்

தொடர்புகளுக்கு
ரஹ்மான் ஹோட்டல்
226. K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

(480)

# அடிப்படைவசதி செய்து தருமா
# முசலிப்பகுதி மக்கள் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்ட முசலிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதி செய்து கொடுக்கக் கோரி அந்தப்பகுதி மக்கள் மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

சிறுக்குளம், கூழாங்குளம், பொற்கேணி, வேப்பங்குளம், புல்லச்சிக்குளம் ஆகிய கிராம மக்களே மேற்படி மகஜரினைக் கையளித்துள்ளார்கள்.

மீளக்குடியமர்ந்தபோது - அரசினால் கொடுக்கப்படும் மீள்குடியமர்வுக் கொடுப்பனவுத் தொகை இதுவரை தமக்கு வழங்க ப்படவில்லையெனவும், தமது சேதமடைந்த வீடுகள் திருத்தப்பட முடியாமல் உள்ளதெனவும், நிலங்கள் காடு மண்டி இருப்பதாகவும் தெரிவித்த அந்த மக்கள் -

இந்த அடிப்படை வசதிகளை அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்து தர முன்வர வேண்டும் என அந்த மகஜரில் கேட்டுள்ளனர். (201)

## யாழ்...

பிராயங்கள் பற்றியும் கேட்டறிந்துள்ளனர்.

அதேவேளை, வடக்கு - கிழக்கில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தமொன்றை மேற கொண்டு அந்த மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளுதல் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளனர்.

## ரணில்...

கள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து நேற்றைய சந்திப்பின்போது ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 14 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கவுள்ள யசுஷி அகாஷி ஜனாதிபதி உட்பட பல தரப்பினரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

## பிரபாகரன்...

ளவர், தமிழர்களின் தொடர்புகள் பற்றியதாகவும், இரண்டாவது பகுதி - இலங்கையின் இருபது ஆண்டுகால இனக்கலவரம் தமிழர்களிடையே எவ்வாறு இரத்தம் சிந்த வைத்ததெனவும் -

இறுதிப்பகுதி - 1983 ஆம் ஆண்டின் பின்னரான போராட்ட வரலாறு சம்பவமாகவும் தெரிவிக்கிறது.

## இந்தியா....

பிக்கையில்லாத் தீர்மானம், எதிர்க்கட்சிகள் முயற்சித்த வேளையே இவரது விஜயம் ரத்துச் செய்யப்பட்டது.

இவரது உத்தியோகபூர்வ விஜயம் இரு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் இருப்பதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (01)

## அரசு - புலிகள்...

நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் நிறுவப்பட்டதாக அரசு தெரிவித்து வருகின்றது.

ஆனால், விடுதலைப் புலிகளின் இந்த முகாம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரே, அமைக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

இந்த முகாம் உண்மைநிலை தொடர்பான வரைபடங்களை அரசு கண்காணிப்புக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் - பீரிஸ் தெரிவித்தார்.

## தென்பகுதி....

சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.

இவ்வாறு வரும் இந்த பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாண பத்திரிகையாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி அவர்களது பிரச்சினைகள் சம்பந்தமாக கேட்டறியவுள்ளனர்.

## அம்பாறையில்....

மையிலான குழுவினர் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து உரியமுறையில் தீர்ப்பது தொடர்பாகவும், நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள் உரியவர்களிடம் கையளிப்பு

அம்பாறை - அக்கரைப்பற்று பிரதேசத்தில் காணாமல் போன முஸ்லிம்களின் நான்கு மோட்டார் சைக்கிள்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் ஆலையடி வேம்பு அலுவலகத்தில் வைத்து மீட்கப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள்கள் ஒப்படைக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி றிஸ்ரோ குஜாலா முன்னிலையில் தம்மால் கண்டு பிடிக்கப்பட்ட நான்கு மோட்டார் சைக்கிள்களையும் ஒப்படைத்தார். (07)

## 23 அகதிகள் நெடுந்தீவு வந்தடைந்தனர்


(யாழ்ப்பாணம்)

இந்திய இழுவைப்படகுகள் மூலம 23 இலங்கை அகதிகள் தமிழகம் மண்டபம் முகாமிலிருந்து நெடுந்தீவை வந்தடைந்துள்ளனர்.

இந்த அகதிகள் நெடுந்தீவு, அனலைதீவு, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஏழாலை தெற்கு களபாவோடை ஸ்ரீவசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

## அன்னதான மண்டபத் திறப்பு விழா



காலம் :- 14.09.2003 ஞாயிறு காலை 9.45 மணி.
தலைமை :- சிவத்திரு வ.குமாரசாமி ஐயா அவர்கள்.

**அன்னதான மண்டபத்தைத் திறந்து வைத்தல்**
மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள்.
(இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர்)

ஆசியுரை :-

♣ ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்யசுவாமிகள்.
(குரு முதல்வர் – நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்)
♣ சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்.
(தர்மசாஸ்தா குருகுல அதிபர். இணுவில்)
♣ உயர்திரு. அ. விநாயகமூர்த்தி அவர்கள் - (நாடாளுமன்ற உறுப்பினர்.)
♣ திரு. ஆ. சி. நடராஜா.
(முன்னாள் அதிபர், வயாவிளான் ம.ம.வி.)

சிறப்புரை :-


♣ செலவி. புஸ்பா செல்வநாயகம் அவர்கள்.
(இளைப்பாறிய ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி)
♣ திருமதி. மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம்.
(முன்னாள் அதிபர் இராமநாதன் கல்லூரி)

மாண்புமிகு அமைச்சர் தி.மகேஸ்வரனைக் கௌரவித்தல்

அன்பர்கள், அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

(சி/1485) ஆலய தேவஸ்தானத்தினர்



## இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

## S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும். (காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல. 711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 - 6080660, 021 - 2226188
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(சி-1299)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12 .09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.